Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு+II விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Dream Solutions Pvt Ltd
The Solutions People
தீர்வு.com வெளியீடுகள்
The King Of Multimedia
சுயகற்றலுக்கான தமிழில் பல்லூடக குறுவட்டுக்கள்
Ms-Word-xp, Ms-Excel-xp, PowerPoint-xp, Ms-Access-xp, Ms-FrontPage-xp, Ms-Visual Basic
Pagemaker, PhotoShop, CorelDraw, Macromedia Flash, Computer Hardware, 3D-Studio Max.
Java, TCP/IP, SQL, Thirukkural, Thamizha
இன்னும் பல...
275, யாழ்வீதி, மானிப்பாய். தொ.இல. 0777 740413

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2036 மாசி – 02 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 முஹர்ரம் 04 (14.02.2005) திங்கட்கிழமை இதழ்: 137

## விமான எதிர்ப்பு ஏவுகணைகள் புலிகள் புதிதாகப் பெற்றனரா?

### விமானப்படை வட்டாரங்கள் சந்தேகம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் இதுவரை இனங்காணப்படாத புதிய ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருக்கலாமென்று விமானப்படை அதிகாரிகள் மத்தியில் சந்தேகம் எழுந்திருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது தொடர்பாக கொழும்பு ஆங்கில வார இதழ் மேலும் தெரிவித்திருப்பதாவது -

வன்னியில் தங்கியிருந்த விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணத்தை ஏற்றிச்செல்வதற்காக கடந்த வியாழக்கிழமை விமானப்படை பெல் - 412 ஹெலிகொப்ரர் ஒன்று கிளிநொச்சிக்குச் சென்றிருந்தது.

பிளைட் லெப்டினனட் சுமுது தஸநாயக்க என்ற விமானி, ஹிங்குராங்கொட விமானத் தளத்திலிருந்து இந்தக் ஹெலியை செலுத்திச்சென்று வவுனியாவில் எரிபொருளை நிரப்பிவிட்டு - ஏ-9 வீதிக்கு மேலாக கிளிநொச்சி நோக்கி பயணமாகியிருந்தார்.


சுமார் 10 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த இந்த ஹெலி இரணைமடுவை அண்மித்த போது திடீரென அதில் பொருத்தப்பட்டிருந்த விமான எதிர்ப்பு ஏவுகணை எச்சரிக்கை கருவியின் சிவப்பு விளக்குகள் ஒளிர்ந்தன.

இதன் பின் தன்னியக்க விமான எதிர்ப்பு ஏவுகணை எதிர்ப்பு கருவிகள் இயங்குவதற்குத் தயாராகின. அத்துடன் அறுபது வெப்பக் கோளங்கள் ஹெலிக்கு அருகில் வெளிவிடப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரின் 'திருட்டை' அம்பலப்படுத்திய படம்!

### 'சண்டே லீடரில்' பிரசுரம்



(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை அரசாங்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கையாடுவது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் மத்தியில், இத்தகைய சம்பவம் ஒன்று தொடர்பான புகைப்படங்களை 'சண்டே லீடர்' பத்திரிகை வெளியிட்டிருக்கிறது.

அரசாங்கத் தரப்பை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ள இந்தப் புகைப்படம், காலி - கோட்டை வளாகத்தினுள் இயங்கும் தென்மாகாண

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டணி அரசாங்கத்திலிருந்து விரும்பினால் வெளியேறட்டும்!



## ஜே.வி.பிக்கு சந்திரிகா எச்சரிக்கை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு அரசாங்கத்தில் இணைந்திருக்கும் சில கட்சிகள் குந்தகம் விளைவிப்பதுடன் தாம் அரசிலிலிருந்து விலகப்போவதாகவும் மிரட்டுகின்றன.

இவர்களை வைத்துக்கொண்டு ஆட்சிசெய்யமுடியாது. இவ்வாறானவர்கள் அரசாங்கத்தை விட்டு போகவிரும்பினால் வெளியேறலாம் என்று ஆளும் கூட்டணியிலுள்ள ஜே.வி.பிக்கு - ஜனாதிபதி சந்திரிகா

## கண்காணிப்புக்குழுவுடன் படையினர் சந்திப்பு!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் வெலிக்கந்த 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேபி-81 குழந்தையின்



# ஜே.வி.பிக்கு சந்திரிகா எச்சரிக்கை!

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு அரசாங்கத்தில் இணைந்திருக்கும் சில கட்சிகள் குந்தகம் விளைவிப்பதுடன் தாம் அரசிலிலிருந்து விலகப்போவதாகவும் மிரட்டுகின்றன.

இவர்களை வைத்துக்கொண்டு ஆட்சிசெய்யமுடியாது. இவ்வாறானவர்கள் அரசாங்கத்தை விட்டு போகவிரும்பினால் வெளியேறலாம் என்று ஆளும் கூட்டணியிலுள்ள ஜே.வி.பிக்கு - ஜனாதிபதி சந்திரிகா கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியற்துறைப் போராளிகளுக்கு ராணுவ பாதுகாப்பு கோருவதில்லை!

## இதுவே ஒப்பந்த நடைமுறை என்கிறார் தமிழ்ச்செல்வன்

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் போராளிகள் - இராணுவப் பாதுகாப்பின்றி மக்கள் மத்தியில் சுதந்திரமாகச் சென்று தமது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும் என்பதே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்த நடைமுறை.

எனவே, கௌசல்யன் இராணுவ பாதுகாப்புக் கோரவில்லை என்று படைத்தரப்பு தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை முன்னாள் அரசியற் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தமது பயணம் குறித்து முன்னர் அறிவிக்கவில்லையென்றும், அவ்வாறு அறிவித்திருந்தால் பாதுகாப்பு வழங்கியிருப்போம் என இராணுவப் பேச்சாளர் தயா ரத்னாயக்க தெரிவித்த கருத்துக் குறித்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தளபதிகளோ, படையணிப் போராளிகளோ நகர்கின்றபோதுதான் இராணுவத்தின் பாதுகாப்பும் வழித்துணையும் கேட்கப்படுவது வழமை.

அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போராளிகளைப் பொறுத்தவன்ரயில் அவர்கள் சுதந்திரமாகச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு -அம்பாறை அபிவிருத்தி குறித்து

# துறைசார் பொறுப்பாளர்களுடன் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆராய்வு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பாகவும் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் - துறைசார் பொறுப்பாளர்களை நேற்று கொக்கட்டிச் சோலை மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் முன்னெடுக்க வேண்டிய பணிகள் குறித்து விளக்கமளித்தார்.

அத்துடன் ஒவ்வொரு துறையும் மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் புலிகளின் முக்கிய உறுபபினர் க.வே. பாலகுமாரன், மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் (மார்ஷல்), தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், திட்டமிடல் மேம்பாட்டு செயலகப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுவுடன் படையினர் சந்திப்பு!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் வெலிக்கந்த 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதிகள் கலந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பேபி-81 குழந்தையின்

# மரபணு சோதனை முடிவு கல்முனை நீதிவானுக்கு!

(கொழும்பு)

சுனாமியின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்ட பேபி-81 என்ற கல்முனைக் குழந்தையின் உண்மையான பெற்றோரை அடையாளம் காண்பதற்கு நடத்தப்பட்ட மரபணுச் சோதனை அறிக்கை, கல்முனை நீதிவானுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# குளத்தில் மூழ்கி மாணவன் மரணம்!

(பருத்தித்துறை)

புலோலி கொட்டுக்குளத்திலிருந்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் பாடசாலை மாணவன் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது.

வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த சி.சிறிகாந்தரூபன் (வயது 16) என்ற புற்றளை மகாவித்தியாலய மாணவனின் சடலமே இவ்வாறு குளத்தில் கண்டெடுக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)


UNIT

PIII கணனிகள் 27,000/- முதல்

Intel 2.4 P4 கணனிகள் புதிய டெல் மொனிட்டருடன் 47,900/- முதல்

Flash Memory (Kingston) - 3750/-
Aopen Combo DVD/CD + RW - 7400/-
Sony Combo DVD/CD + RW - 7600/-
Sony CD - Writter - 5100/-

3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

An Indian Engineer's Centre

மேலும் சலுகைக்கு நேரடியாக ஒருதரம் விஜயம் செய்து பாருங்கள்

உலர்கள், பாடசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்

347, K.K.S. Road
Manohara Theatre Junction,
Jaffna.

# இணையம் மூலம் காதலித்த யுவதி உறவினரால் கடத்தல்!

## கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

ஜேர்மன் நாட்டிலிருந்து இணையத்தளத்தினூடாக மட்டக்களப்பு யுவதியைக் காதலித்த கோண்டாவில் இளைஞன் - உறவினர்களின் உதவியுடன் தமது மகளைக் கடத்தியுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த 23 வயதுடைய மேற்படி இளைஞன் ஜேர்மன் நாட்டிலிருந்து இணையத்தளத்தின் மூலம் மட்டக்களப்பை சேர்ந்த 20 வயதுடைய யுவதி ஒருவரைக் காதலித்து வந்தார் என்றும்,

அண்மையில் காதலனின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் சிலர் மட்டக்களப்புக்குச் சென்று பெற்றோருக்கு தெரியாது பிரஸ்தாப யுவதியைக் கடத்தி வந்துள்ளதாகவும் -

கடத்தி வரப்பட்ட தனது மகளை மீட்டுத் தருமாறும் யுவதியின் பெற்றோரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி யுவதியை தேடும் நடவடிக்கையில் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டு வருவதுடன் இளைஞனின் பெற்றோரைவிசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தரம் 10 வரை வகுப்புக்கள் நடத்த அனுமதி

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் இந்த ஆண்டு முதல் பத்தாம் தரம் வரை வகுப்புக்களை நடத்துவதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக தரம் ஒன்பதுவரையான வகுப்புக்களே அங்கு நடைபெற்று வந்தன.

இந்தப் பாடசாலையைத் தரமுயர்த்த மேலும் வகுப்புக்களை அனுமதிக்குமாறு அந்தப்பகுதி பொது மக்கள், கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து, இந்தப் பாடசாலையில் தரம் பத்து வரை வகுப்புக்களை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதிபர் எஸ்.சண்முககுமார் தெரிவித்தார்.

இந்தப் பாடசாலையில் மேலதிக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இடநெருக்கடியும், தளபாடப் பற்றாக்குறையும் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

(82)

# நியமனக் கடிதம் வழங்கல்

தேசிய கல்லூரிகளில நியமனம் பெறுவதற்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்களையும், தேவையான ஆவணங்களையும் உரியவர்கள் இன்று காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என்று பீடாதிபதி காலாநிதி தி.கமலநாதன் தெரிவித்தார்.


மனோகரா திரையரங்கு யாழ்ப்பாணம்
இன்றுமுதல்
M.குமரன் Son of மகாலட்சுமி
கா.நேரம்: 10.30, 2.30
வெற்றி வாரமாக - இளைய தளபதி விஜய், திரிஷா நடித்த
திருப்பாச்சி
கா.நேரம்: 6.30, 9.30
ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

நாதன்ஸ் யாழ்ப்பாணம் குளிரூட்டப்பட்டது
காதலர் தினத்தை முன்னிட்டு இன்று முதல்
டைட்டானிக் (தமிழாக்கம்)
LEOLARD - Dic
APRIO - Kate
[TITANIC]
கா.நே(பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், லயா, ராதாரவி
நடித்த
கஜேந்திரா
கா.நே. (பு.நே) 11.00, 2.45, 6.00

நாகம்ஸ் சுன்னாகம்

4 ஆவது வெற்றிவாரமாக
தேவதையைக் கண்டேன்
பு.நே. 11.00, 3.00, 7.00, 10.00
அடுத்த வெளியீடு திருப்பாச்சி

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் –திரிஷா
நடித்த

ஜி
பு.நே: 10.30, 2.30,
6.30, 9.30

ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
ராமகிருஷ்ண சாஸ்திரிகள்

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்–மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு, கடை, வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம் கை ரேகை மூலம் அறிந்து கொள்ள நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது.
Room No - 05,
Pillaiyar Inn,
31, Manipay Road,
Jaffna.
சந்திக்கும் நேரம்: காலை 9.00 – மாலை 7.00 வரை
அறை எண் - 05,
பிள்ளையார் இன்,
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
Phone: 021 - 2222829
Mobile: 0776 - 923623

உலக முதல்தர நிறுவனங்களான DELL,IBM,Microsoft, Sun MicroSystem, Cisco, Compaq, BellLabs, Intel மற்றும் HP இந்நிறுவனங்களின் ஆதரவு பெற்ற அவற்றின் பொருட்கள் எங்கள் ஊடாக உங்கள் கைகளுக்கு
இந்திய பொறியியல் துறையில் அதி உன்னத எலக்ட்ரானிக்ஸ் அன்ட் கம்யூனிக்கேசன் துறையில் முதன்மை எஞ்சினியரிங் பட்டம் பெற்ற பொறியியலாளரின் நேரடிக் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட ஒரு உன்னத நிறுவன வழங்கல்கள் உஙகள் கைகளில்
உங்கள் தெரிவே எங்கள் அமைப்பு! உங்களுக்கு விரும்பிய உதிரிப்பாகங்கள் மற்றும் உலகமுன்னனி நிறுவனங்களின் பாகங்கள என்பன உங்கள் தெரிவில்
எல்லாமே Hybrid Boost, Hypher Thread, Dual Monitor. வசதிகளுடன்
உடனடி டெலிவரிக்கு முந்துங்கள்
OUR SPECIAL PACKAGES
Intel P4 கணனிகள் With Out Monitor RS. 34,500/- only
⊙ New Compaq PIII550, 600, 733, 800, 1GHz 128 SDRAM,10GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, 15" color Monitor,Keyboard, Mouse
Rs. 32,000/- முதல்
⊙ New PIV 128 SDRAM,40GB Hard Disk, 1.44FDD, 52X CDROM, ATX Tower with Front USB & Audio, 15" color Monitor,Keyboard, Mouse
Rs. 48,900/- முதல்
ஒன்று இரண்டு என்றல்ல குவித்து வைக்கப்பட்டுள்ள இருப்புகள் கைவசம்
* All with 3 years immediate Replacement warranty
கொழும்பு நிர்ணய விலையில்
Special Opening Offer
Latest Computer Table, Screen Filter, Mouse Pad, Dust Cover & Etc.
நிபந்தனைக்குட்பட்டது. வரையறுக்கப்பட்ட 3 தினங்கள் மட்டுமே
எல்லாமே தரமான மற்றும் கொழும்பு நிர்ணய விலையில்
Knowledge beyond the technology. That's CeSCO
Real imported products @ Colomdo Price
இலகுவான உங்கள் தெரிவுகளுக்காக நகரின் மத்தியில் விசாலமான பரப்பில்
A Bright solution providing centre
இல்லை என்று எதுவுமில்லை
CeSCO A Computer & Electronics Solution Company for your tasty knowledge bite. A PLACE for All Computing, Electronics & Networking
சலுகைக்காக விசேடமாக கணிக்கப்பட்ட விலைஆதலால் குறிப்பிட்ட தினங்கள் மட்டும்.
தரம் தராதரம் மற்றும் நிரந்தரம் எமது தாரக மந்திரம்
CeSCO
56/15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி பின்புறம்)


# கண்ணீர் அஞ்சலி




நாகேஸ்வரன் தாரணி
மலர்வு: 04.02.1993 உதிர்வு: 26.12.2003
உடுத்துறை.



நாகேஸ்வரன் தமிழினி
மலர்வு: 01.04.1999 உதிர்வு: 26.12.2003
உடுத்துறை.

கதிரவன் மலர்ந்த காலையில்
கண்ணிமைக்கும் நேரத்தில்
கடலலையாய் வந்த காலன் அவன்
கனி உன் குடும்பத்தை காவிச்சென்றானோ
கடற்கரையோரம் நின்று
கண்ணீருடன் முகம் தேடும்
உன் சோகத்தை
கவியாக்க முடியுமா?



நாகேஸ்வரன் தயாழினி
மலர்வு: 14.07.2003 உதிர்வு: 26.12.2003
உடுத்துறை.



நாகேஸ்வரன் ஜெயமதி
உதிர்வு: 26.12.2003
உடுத்துறை.

உன் நிலை கண்டு துயருறும்:
நண்பர்கள்
வடமராட்சி கிழக்கு.

(1064)






மட்டக்களப்புக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி - கரடியன் ஆறு அறிவுச்சோலை சிறுவர்களுடன் கலந்துரையாடு வதையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுத் தொண்டர்களுடன் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

### அடுத்த ஐந்து வருடங்களில்

# பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பு

பத்தாயிரம் பட்டதாரிகளை அடுத்த ஐந்து ஆண்டுகளில் தருண அருண திட்டத்தின் கீழ் தனியார் துறையில் வேலைக்கு அமர்த்துவ தற்கான திட்டமொன்றை அரசாங் கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

தருணஅருண II திட்டத்தின் கீழேயே இந்த வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தை மனிதவள மேம்பாட்டு அமைச்சு மேற்பார்வை செய்யவுள்ளது.

முதற்கட்டமாக ஒவ்வொரு பட்ட தாரிகளுக்கும் பல்வேறு துறை களில் பன்னிரண்டு மாதங்களுக்கு விதிவிட மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலம் தனியார் துறையில் சவால் களை எதிர்கொள்ளத்தக்க வகை யில் பட்டதாரிகளை பயிற்றுவிக்க முடியும் என்ற நம்பிக்கை தெரிவிக் கப்பட்டது.

மாதாந்தம் ஆகக்குறைந்தது ஆறாயிரம் ரூபா சம்பளம் பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள இந்தத் திட்டத்தின் மூலம், பட்டதாரிகளின் ஆங்கில மொழி யாற்றல் மற்றும் தகவல் தொழில் நுட்பத்திறனை வளர்க்க முடியும் என்று அரச அதிகாரிகள் தெரிவித் தனர்.

ஒவ்வொரு வருடமும் இரண்டா யிரம் பட்டதாரிகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் வேலை பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கு 156 தொழில் நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன.

## தற்காலிக குடியிருப்பு ஒப்படைப்பு விழா

சுனாமி அனர்த்தத்தால் வீடு களை இழந்தவர்களுக்கென அம் பாறை மாவட்டத்திலுள்ள தம்பட் டைத்தீவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அமைக்கப்பட்ட 150 தற்காலிக வீடுகள் அடங்கிய குடி யிருப்புக்கிராமம் நாளைமறுதினம் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு இந்த வீடுகள் வழங்கப்படவுள்ளன. இந்தக் குடியி ருப்பின் அடிப்படைத் தேவைக ளைப் பொறுத்து கணிசமான வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக் கப்படவுள்ளன.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய குடும்பங்க ளுக்கும் தற்காலிக குடியிருப்பு களை அமைத்துக் கொடுக்க புனர் வாழ்வுக்கழகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# சம்பள உயர்வு வழங்காவிடின் தொடர் வேலைநிறுத்தம்!

## கொத்தணி பஸ் கம்பனி ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த வரவு - செலவுத் திட்டத் தில் வழங்கப்பட்ட 2500 ரூபா சம்பள ஒத்திவைப்பு தமக்கும் வழங்கப்படாவிடின் வேலைநிறுத் தப் போராட்டத்தில் ஈடுபடப்போவ தாக கொத்தணி பஸ் கம்பனி ஊழியர்கள் சங்க சம்மேளனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உடனடியாகத் தமக்கும் சம்பள உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியுள்ள கொத்தணி பஸ் கம்பனி ஊழியர் சங்க சம்மேளனம் - வழங்க மறுத் தால் தொடர்ச்சியான வேலை நிறுத் தத்தில் குதிக்கப்போவதாகக் கூறி யுள்ளனர்.

எனினும் அரசாங்கம் அது தொடர்பாக எதுவித கருத்துக்க ளையும் விடுக்கவில்லையெனத் தெரியவருகிறது.

## பதினான்கு பேரின் சடலங்கள் மீட்பு

காலி - தெல்வத்த மெட்டிவல என்ற இடத்திலிருந்து 14 பேரின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தின் போது இறந்தவர்கள் என நம்பப்படும் இவர்களின் சடலங்கள் நீர் நிறைந்த இடமொன்றிலிருந்து மீட்கப்பட் டுள்ளன. மிகவும் மோசமான நிலை யில் காணப்பட்ட இந்தச் சடலங் கள் மரண விசாரணைகளின் பின் னர் அடக்கம் செய்யப்பட்டன. (01)

### கொபி அனானின் கண்டனம் குறித்த

# அரசாங்கத்தின் நிலைப்பாடு சில தினங்களில் வெளியாகும்!

### —லக்ஷ்மன் கதிர்காமர்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் மட்டக் களப்பு - அம்பாறை மாவட்ட அரசி யற்துறைப்பொறுப்பாளர் இ.கௌ சல்யன் கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டிப்பதாக ஐ.நா. பொதுச் செயலர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாக கவனம் செலுத்துவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

தேசப்பற்று தேசிய இயக்கத் தின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே - லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை எதிர்வரும் தினங்களில் வெளியிடவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

கொபிஅனான் வெளியிட்ட அறிக்கை தொடர்பாகத் தமது கவ லையை வெளிப்படுத்தும் வகையில் தேசப்பற்று தேசிய இயக்கத்தினர், கடிதம் ஒன்றை அமைச்சர் கதிர் காமரிடம் கையளித்திருந்தனர்.

தாம் அறிந்தவரையில் இதற்கு முன்பு ஐக்கிய நாடுகள் சபையின் பின் பொதுச் செயலர் இவ்வாறான அமைப்பின் உறுப்பினர்கள் உயிரி ழநத வேளையில் தனது அனுதாபச் செய்தியை வெளியிட்டதில்லை என்று ஜே.வி.பி.யின் பிரசார செய லர் தெரிவித்தார்.

இது விடுதலைப்புலிகளின் அமைப்பை உற்சாகப்படுத்தும் அனுதாபச் செய்தியாகும்.

இவ்வாறான செய்தி நாட்டின் இறைமைக்குப் பாதகமானது. ஆகை யால், இலங்கை அரசாங்கம் என்ற வகையில் ஐக்கிய நாடுகளின் நிலைப்பாட்டை வெளிப்படுத்து மாறு தாம் கோரிக்கை விடுத்துள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வன்னிப் பகுதி சமுர்த்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை

(வவுனியா)

வவுனியா - மன்னார் மாவட்டங்க ளில் சமுர்த்தித் திட்டத்தை நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு வன்னி புனர்வாழ்வு அமைச் சர் ரிசாத் பதியுதீன் சமுர்த்தி அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்தில் முல்லைத்தீவு, மன் னார், வவுனியா போன்ற இடங்களி லும் இந்தத் திட்டத்தை நடை முறைப்படுத்தவேண்டும்.

குறிப்பிட்ட மூன்று மாவட்டங்களி லும் பெரும் எண்ணிக்கையானோர் வறுமை நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் அங்கு சமுர்த் தித் திட்டம் அமுல்செய்யப்படுவது அவசியமானதாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (01)

# திருமலையில் கிரேக்க கப்பலின் மருத்துவப் பணிகள் ஆரம்பம்

(திருகோணமலை)

இராணுவத்தினரின் எதிர்ப்பால் பலத்த சர்ச்சைக்குள்ளாகியிருந்த திருகோணமலைக் கடலில் தரித் துள்ள கிரேக்க கப்பல், தற்போது அரசாங்கம் விதித்துள்ள சில நிபந்தனைகளின் அடிப்படையில் தனது மருத்துவப் பணிகளை ஆரம்பித்துள்ளது.

வைத்தியவசதி அளிக்கும் நோயாளிகள் எண்ணிக்கை மட்டுப் படுத்தப்பட்டுள்ளதுடன், ஒரு நேரத் தில் ஆகக்கூடியது ஆறு நோயாளி களையே கப்பலின் உள்ளே எடுத் துச்சென்று சிகிச்சையளிக்க அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்வாறு கப்பலில் சிகிச்சையளிக்கப்படும் நோயாளி கள், அதற்கு முன்னதாக அருகில் இராணுவத்தால் உருவாக்கப்பட் டுள்ள பிரத்தியேக தற்காலிகக் கூடாரத்துக்கு அழைத்துச்செல்லப் பட்டு, அங்கிருந்து இராணுவத்தி னரின் விசேட அனுமதியுடனேயே கப்பலுக்குக் கூட்டிச்செல்லப்பட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஓசன் மொனாக் என்ற இந்தக் கிரேக்கக் கப்பல், திருகோணமலை துறைமுகத்தைப் பெப்ரவரி 5 ஆம் திகதி வந்தடைந்து, கடலில் தரித் திருந்து மருத்துவ சிகிச்சை வழங் கத்தக்கதாக அந்தக் கப்பலை ஒரு நடமாடும் வைத்திய சிகிச்சை நிலையமாக மாற்றிருந்தார்கள்.

இருப்பினும், இத்தகைய மருத் துவ வசதியை வழங்குவதற்கு முன்னர் அரசு வழங்கிய அனும தியை மீளப்பெற்றுக்கொண்டு, நோயாளிகள் கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட அனுமதி மறுத்ததைய டுத்து சர்ச்சை தொடர்ந்தது. இறுதி யில் பலத்த நிபந்தனைகளை விதித்து, நேற்று முன்தினம் அதி காலையிலிருந்து இந்த மருத்துவ சேவை வழங்குவதற்கு அரசு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியை வழங்கியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்கோ அல் லது அவர்களது ஆதரவாளர்க ளுக்கோ இந்த மருத்துவ சேவை கிடைக்காமல் தடுப்பது, சிங்கள நோயாளிகளுக்கு இத்தகைய மருத்துவ சேவைக்கான முன்னு ரிமை வழங்குவது, தமிழர்களுக்கு வழங்கப்படக்கூடிய அடிப்படை வசதிகளை வழமைபோன்று அடககி ஒடுக்குவது போன்ற காரணங்களுக் காகவே அரசு திட்டமிட்ட இந்த இனவாத நடவடிக்கையில் இறங்கி யிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

## அம்பாறையில் 41 பில்லியன் ரூபா இழப்பு

(அம்பாறை)

கடந்த வருடம் சுனாமி அனர்த் தத்தால் அம்பாறை மாவட்டத்தில் 41 பில்லியன் ரூபாவுக்கு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ மதிப்பீடுகளில் இருந்து தெரியவரு கிறது.

இது தொடர்பாக உத்தியோக பூர்வ மதிப்பீட்டு விபரங்களை அமைச்சர் பேரியல் அஸ்ரப் அர சாங்கத்திடம் கையளித்துள்ளார். அத்துடன் அம்பாறையில் மீள் கட்டுமானம் குறித்த ஆலோசனை களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# சுனாமி அனர்த்தக் கொடுப்பனவை வழங்கக்கோரி மறியல் போராட்டம்



திருகோணமலை - பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த திருக்கட லூர் கிராம மக்கள் தமக்கு அரசினால் வழங்கப்படுகின்ற சுனாமி அனர்த்தக் கொடுப்பனவான 2500 ரூபா உடனடியாக வழங்கப்பட வேண்டும் எனக் கோரி நேற்று முன்தினம் காலை வீதி மறியில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதன் காரணமாக திருகோணமலை வடக்குப் பிரதேசப் போக்கு வரத்துக்கள் முற்றாகச் செயலிழந்தன. காலை 6.30 மணிக்கு ஆரம்பித்த இந்தப் போராட்டம் மதியம் வரை நீடித்தது. பிரதேச செயலாளர் ஆர்ப் பாட்டப் பேரணி நடைபெற்ற இடத்துக்கு வந்து சகலருக்கும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் என உறுதி அளித்ததைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட 560 குடும்பங்களில் - 450 குடும்பங்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணக் கூப்பன்கள் வழங்கப்பட்டன. 110 குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட வில்லை என்பதும் இங்கு கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கிராமத்தின் அயலிலுள்ள விஜிதபுரம் என்னும் சிங்கள மக்கள் வாழும் கிராமத்தைச் சேர்ந்த அனைவருக்கும் இந்த நிவாரணங் கள் ஏற்கனவே முழுமையாக வழங்கப்பட்டிருந்தது. இந்த இரண்டு கிராமங்களும் ஒரே கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்டதாகும்.

## ஹைதராபாத் ரெனிஸ்

# சம்பியன் பட்டத்தை வென்றார்

# இந்திய வீராங்கனை சானியா மிர்சா!



(ஹைதராபாத்)

உலக மகளிர் ரெனிஸ் பட்டத்தைவென்று புதிய சாதனை படைத்துள்ளார் சானியா மிர்சா.

டபிள்யூ.டி.ஏ. எனப்படும் உலக மகளிர் ரெனிஸ் பட்டத்தை வெல்லும் முதல் இந்திய வீராங்கனை சானியா மிர்சா என்பது குறிப் பிடத்தக்கது.

ஹைதராபாத்தில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற மிகவும் விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் 18 வயதாகும் சானியா 6-4, 5-7, 6-3 என்ற செட் கணக்கில் உக்ரேன் வீராங் கனை அலையோனோ போன்டாரென்கோ வைத் தோற்கடித்தார்.


இருவருமே முதல் முறையாக மோதுவ தால், இந்திய ரசிகர்களிடம் மட்டுமல்லாது உலக ரசிகர்களிடமும் பெரும் ஆவல் காணப்பட்டது.

அரங்கில் குழுமியிருந்த ஆயிரக்கணக் கான ரசிகர்களின் ஆதரவு சானியாவுக்கே என்றாலும், உக்ரேன் வீராங்கனை 2 ஆவது செட்டில் வீறுகொண்டு ஆடி செட்டைக் கைப் பற்றி (1-1), ஆட்டத்துக்கு திருப்பம் அளித்தார்.

இந்தநிலையில் 3ஆவது செட் ஆட்டம் மேலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. ஆனால் சானியாவின் வலுவான திருப்பி அனுப்புதலுக்கு பலநேரங்களில் பதில் சொல்லமுடியாமல் தோல்வியைத் தழுவினார் போன்டாரென்கோ.

இந்தப் போட்டித் தரவரிசையில் போன்டா ரென்கோ 9ஆவது இடத்தில் இருந்தார். அதே சமயம் சானியா தரவரிசையில் இடமில்லாத வீராங்கனையாகும்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் 6-4, 7-6 (7-4) என்ற நேர் செட் கணக்கில் ரஷ்ய வீராங்கனை மரியா கிரிலென் காவைத் தோற்கடித்து சானியா இறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.




அவுஸ்ரேலிய கிராண்ட் ஸ்லாம் ரெனிஸ் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறிய பெருமையைப் பெற்ற சானியாவுக்கு, இந்த வெற்றி மேலும் பெருமை சேர்த்துள்ளது.

இறுதியாட்டம் என்பதால் ஹைதராபாத் ரசிகர்கள் அரங்கை முற்றுகையிட்டனர். இத னால் லேசான தடியடி நடத்தி கூட்டத்தைப் பொலிஸார் கலைத்தனர்.

முன்னதாக நடைபெற்ற இரட்டையருக்கான இறுதி ஆட்டத்தில் சீனாவின் ஸி யான், ஜி ஜெங் ஜோடி 6-4, 6-1 என்ற நேர் செட்களில் சகநாட் டின் திங் லி, தியான் தியான் சன் ஜோடியைத் தோற்கடித்து பட்டத்தை வென்றது.

திங் லி கடந்த ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத் தக்கது.

## இந்தியா சாதிக்கும்; ஷேவாக் நம்பிக்கை!



(மும்பை)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவுடன் 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் மோதவுள்ளது. இந்தப் போட்டியில் இந்தியா நிச்சயம் சாதிக்கும் என்று தொடக்க வீரர் ஷேவாக் கூறினார். மும்பையில் நிருபர்களிடம் பேட்டி அளித்த ஷேவாக் கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்ற போது மகத்தான வெற்றி கிடைத்தது. இந்த முறை பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது. இந்திய ரசிகர்களின் அமோக ஆதரவு இருப்பதால் நமது வெற்றிக்கு தடை எதுவும் இருக்கமுடியாது என்றார்.

கடந்த ஆண்டு இந்திய அணி பாகிஸ்தான் சென்ற போது டெஸ்ட் போட்டியில் ஷேவாக் 300 க்கும் அதிகமான ஓட்டங்கள் எடுத்தார். இந்திய டெஸ்ட் வரலாற்றில் இந்தச் சாதனையை எட்டிய முதல் வீரர் என்ற பெருமையை ஷேவாக் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# எம்மை குறைத்து மதிப்பிடவேண்டாம்

# இளம் சிங்கங்கள் இருக்கிறார்கள்!

## எச்சரிக்கிறார் இன்சமாம்



விளம்பரப் படத்தில் இன்சமாம்

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியைக் குறைத்து மதிப்பிடவேண்டாம் என்று அந்த அணியின் கப்டன் இன்சமாம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி எதிர்வரும் 25ஆம் திகதி இந்தியா வருகிறது. இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையே 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணி எதிர்வரும் 18ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இதற்கிடையில் இந்தியாவில் நடைபெறும் ஒரு விளம்பர படப்பிடிப்பில் கங்குலியுடன் இணைந்து பங்கேற்பதற்காக, பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்சமாம் நேற்றுமுன்தினம் இந்தியா வந்தார். இந்தியாவில் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது -

இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்ய இருக்கும் பாகிஸ்தான் அணியில் இளம் மற்றும் புதுமுக வீரர்கள் இடம்பெற்று இருப்பதால் அணியை குறைத்துமதிப்பிடவேண்டாம். சிங்கம் போன்ற மனவுறுதி படைத்த வீரர்கள் அணியில் உள்ளனர். மிக முக்கியமான இந்தப் போட்டித் தொடரில் சிறப்பாக ஆட முழு ஈடுபாட்டையும் காட்டுவார்கள்.

1987 மற்றும் 1999ஆம் ஆண்டுகளில் இந்தியச் சுற்றுப்பயணத்தின்போது பாகிஸ்தான் அணியில் நட்சத்திர வீரர்கள் யாருமில்லை. இருப்பினும் அந்த அணி வெற்றிபெற்றது. அதேபோல் வேகமும், ஆர்வமும், அர்ப் பணிப்பும் கொண்ட வீரர்கள் தற்போதைய அணியிலும் உள்ளனர்.

கடந்த ஆண்டில் பாகிஸ்தானில் நடந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டித் தொடரில் நாங்கள் இந்திய அணியிடம் தோற்றோம். ஆனால் தற்போது எங்கள் அணி நல்ல முன் னேற்றம் கண்டுள்ளது.

அவுஸ்ரேலிய தொடரில் தோற்றாலும் நல்ல அனுபவம் கிடைத்திருக்கிறது. இதனை இந்திய அணிக்கு எதிரான ஆட்டத்தில் செயற்படுத்து வோம்.

பாகிஸ்தானில் இந்திய அணியிடம் நாங்கள் தோற்றதை மறக்கவில்லை. அதற்காக பழி வாங்கும் எண்ணமில்லை. போட்டியில் சிறப் பாக ஆடும் அணி வெற்றிபெறும். சரியான வேகத்துடன் போட்டியில் ஆடுவோம்.

இருநாட்டு ரசிகர்களும் ஆட்டத்தை ஆட்ட மாக மட்டுமே பார்க்கவேண்டும். ஆட்டத்துக் கான ஆபத்தான விடயங்களில் இறங்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# கோப்பாய் கோட்டமட்டத்திலான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

கோப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக் கிடையிலான வலைப்பந்தாட்ட போட்டிகளின் இறுதியாட்டமும், மூன்றாம் இடத்துக்கான போட்டிகளும் இன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நாளை அத்தியார் இந்துக் கல்லூரியிலும் பிற்பகல் 2 மணிக்கு நடை பெறவுள்ளன.

15 வயதுப்பிரிவில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயத்தை 9:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, அத்தியார் இந்துக் கல்லூரியை 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

17வயதுப் பிரிவில் இடைக்காடு மகாவித்தி யாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியை 22:14 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கும், புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, ஆவரங்கால் மகாஜன வித்தியால யத்தை 17:7 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கும் தெரிவாகின.

19வயதுப் பிரிவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, இடைக்காடு மகாவித்தியாலயத்தை 21:19 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றும், புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரியை 33:7 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றும் இறுதியாட்டத்திற்குத் தெரிவாகின. (12)

## விளையாட்டு

# கரப்பந்தாட்டம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை கல்விக்கோட்ட பாடசாலை களுக்கிடையிலான கரப்பந்தாட்ட போட்டிகள் இன்று பி.ப. 1.30 மணிக்கு மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுமென கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார். (72)

# பொப் வூல்மர் மீது ஐ.சி.சி. நடவடிக்கை



(லண்டன்)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடர் குறித்து, நடுவர்கள்மீது அவதூறு தெரிவித்த பாகிஸ்தான் பயிற்சியாளர் பொப் வூல்மர் சர்வதேச கிரிக்கெட் சபையின் தண்டனைப் பார்வைக்கு உள்ளாகியுள்ளார்.

அவுஸ்ரேலியாவில் சமீபத்தில் முடிவுற்ற இறுதிப் போட்டியில் 2-0 என அவுஸ்ரேலியா விடம் பாகிஸ்தான் தோல்வியுற்றது.

இதனால் ஆத்திரமடைந்த வூல்மர், அவுஸ் ரேலிய வீரர்கள் அடிக்கடி முறையிட்டால், நடுவர்கள் சில தீர்ப்புக்களை வேண்டுமென்றே அவர்களுக்கு வழங்கியதாலேயே பாகிஸ்தான் அணி தோல்வியுற்றது எனக்கருத்துத் தெரிவித் திருந்தார்.

இந்தச் செய்தி அவுஸ்ரேலியாவில் பல்வேறு பத்திரிகைகளிலும் வெளியாகின. இதனை அறிந்த ஐ.சி.சி. அவர்மீது நடவடிக்கை எடுக்க முடிவு செய்துள்ளது.

பொதுவாக, நடுவர்கள் அளிக்கும் முடிவுகள் குறித்து முறையற்ற கருத்துக்களை, அதுவும் பொதுவான இடங்களில் அளிக்கக்கூடாது என்பது ஐ.சி.சி. விதிமுறைகளில் ஒன்று.

இதையடுத்து, வூல்மருக்கு ஆட்டத்துக்கு அளிக்கும் சம்பளத்தில் குறைந்தபட்சம் 50 சதவீதம்வரை அபராதம் விதிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

# அகமதாபாத்தில் ஆட பாகிஸ்தான் மறுப்பு!

அகமதாபாத்தில் ஒருநாள் போட்டியிலும் விளையாடமாட்டோம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நாட்டு கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹரியார் கான் கூறிய தாவது -

பாதுகாப்புக் காரணமாக அகமதாபாத்தில் டெஸ்ட் போட்டியிலோ, ஒருநாள் போட்டியிலோ விளையாடமாட்டோம். இதை நாங்கள் இந்திய கிரிக்கெட் சபைக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டோம்.

பாகிஸ்தான் அணியின் இந்திய சுற்றுப் பயணம் அமைதியாக நடைபெறவேண்டும். அதில் ஒரு சிறு அசம்பாவிதமும் நடந்துவிடக் கூடாது என்பதே எங்கள் விருப்பம் என்று அவர் கூறினார்.

## க.பொ.த உயர்தரத்தில்

# பாடத்தெரிவில் ஏற்பட்ட தவறுகளால் பரீட்சைக்கு தோற்றமுடியாத மாணவர்கள்

(சங்கானை)

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 2005 கலைப்பிரிவில் கல்வி பயிலும் மணவர்கள் பத்துப்பேர் 2005 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் 2005 கலைப்பிரிவில் கல்வி பயிலும் 10 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது பாடத்தெரிவில் கட்டாயமாகத் தெரிவுசெய்யவேண்டிய சில பாடங்களை தெரிவுசெய்யாமல் தவறுதலாக வேறு பாடங்களைத் தெரிவுசெய்துள்ளனர்.

ஆனால், சிறிது காலத்தில் உண்மை நிலை தெரியவர, இதுகுறித்து அதிபரிடம் தாம் பாடங்களை மாற்றப்போவதாக மாணவர்கள் அனுமதி கேட்டதாகவும்- ஆனால், அதிபர் அவ்வாறு பாடங்களை மாற்ற வேண்டாம் எனவும், எந்தப் பிரச்சினையும் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என உறுதியாகத் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் குறிப்பிட்ட மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களையே தொடர்ந்து கற்றதுடன், பரீட்சைக்கு விண்ணப்பித்தனர். தற்போது பரீட்சைக்கான அனுமதி அட்டையும் கிடைக்கப்போகும் நிலையில், குறிப்பிட்ட மாணவர்கள் பாடத்தெரிவில் ஏற்பட்ட தவறால் பரீட்சைக்குத் தோற்றமுடியாது என பாடசாலை நிர்வாகத்தால் கூறப்பட்டுள்ளது.

கல்வித் திணைக்கள அதிகாரிகள் இந்த விடயத்தில் தமது இந்த அவல நிலையைப்போக்கி, தங்களை இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்ற ஏதாவது ஒழுங்குகளைச் செய்ய முன்வரவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (207)

## மருதனார்மடம் - உடுவில் பகுதியில் பாதீனிய செடியின் பரவல் அதிகரிப்பு

மருதனார்மடம் - உடுவில் டச்சு வீதி ஆகிய பகுதிகளில் மீண்டும் பாதீனியம் செடிகள் பெருகிக் காணப்படுகின்றன. கடந்த வருடம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த நச்சுத்தாவரம், மழை காலத்தில் நீருடன் பரவி புதிய இடங்களில் முளைதத்துள்ளன.

இந்தத் தாவரத்தின் பூக்களில் உள்ள சிறிய இனப் பூச்சிகள் அயலில் உள்ள தோட்டங்களில் காணப்படும் புகையிலை, மிளகாய், வெங்காயம் போன்றவற்றின் சாற்றை உறிஞ்சிக்குடிக்கும்போது பாதீனிய பூக்களிலுளள நச்சுப் பதார்த்தம் மரகறிச் செடிகளில் உட்சென்று தாக்கத்தை ஏற்படுத்துவதால் அவற்றின் விளைதிறன் குறைவடைவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

உடனடியாக இந்தப் பாதீனியத்தை முழுமையாக அழிக்காது விடின், ஏனைய பயிரினங்களிலும் நோய்த்தாக்கம் ஏற்பட்டு விவசாய செய்கையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என கமத்தொழில் சார்ந்த அமைப்புக்கள் அச்சம் தெரிவித்துள்ளன. (101)

### வலி. வடக்கு பிரதேச சபைக்கு புதிய செயலாளர் நியமனம்

வலி.வடக்கு பிரதேச சபையின் புதிய செயலாளராக ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம் கடந்த மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வித் திணைக்கள நிர்வாகப் பகுதியில் கடமையாற்றிய இவர், இங்கு செயலாளராகப் பணிபுரிந்த செல்வரட்ணம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து அவரின் இடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (101)

## 'நெஞ்சு கனக்கும் நினைவுகள்' கவிதை நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் "நெஞ்சு கனக்கும் நினைவுகள்" கவிதைத் தொகுப்பு அறிமுக விழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழ் மாணவர் ஒன்றிய தலைவர் குணேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நூல் அறிமுக விழாவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், பல்கலைக்கழக விரிவுரையாளர் பொ. பூலோகசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (91)

## பாடசாலைகளில் ஆடம்பர நிகழ்வுகளை தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தால் பலியானவர்களின் துன்ப துயரங்களில் முழுமையாக அனைவரும் பங்குகொள்ளும் நோக்கில் இவ்வருடம் முதலாம் தவணையில் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்களில் ஆடம்பர நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கல்வி அமைச்சால் சகல பாடசாலைகளுக்கும், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டீ மெல் ஒப்பமிட்டு அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில்-

பாடசாலைகளில் இவ்வருடம் நடைபெறும் மெய்வல்லுநர், கிரிக்கெட் ஆகிய போட்டிகளை அமைதியாக நடத்தவேண்டுமென்றும், பான்ட் வாத்தியங்கள், மங்கள வாத்தியங்கள் முழங்குவதைத் தவிர்க்க வேண்டும். பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் கிரிக்கெட் பெருமோதல் (Big Match) போன்றவற்றையும் எளிமையாக நடத்தவேண்டும்.

அதேவேளை வழமைபோல வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கவும், அகில இலங்கை ரீதியான விளையாட்டுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (101)

## சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஐந்து பேருக்கு தண்டம்!

வட்டுக்கோட்டைப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற ஐவர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வட்டுக்கோட்டை மின் அத்தியட்சகர் பொ.சண்முகானந்தசிவமும், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் அத்தியட்சகர் வஜிர அதிகாரம் ஆகியோர் சட்டவிரோத மின் பாவனையாளர்களைப் பிடிக்கும் முகமாக எடுத்த நடவடிக்கை காரணமாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் மல்லாகம் மாவட்ட நீதிவான் சரோஜினி இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவர்களை தலா 15 ஆயிரம் ரூபா வீதம் தண்டப்பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.



வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச சபை உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி, வலி.தெற்கு பிரதேச சபைக்கு மாற்றலாகிச் சென்ற சுகுணராஜ் - அலுவலகத்தில் நடைபெற்ற பிரிவுபசார விழாவின்போது சக உத்தியோகத்தர்களுடன் காணப்படுகிறார். (48)



யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற தையல் பயிற்சி நெறியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றோரைப் படத்தில் காணலாம். (111)

### உடுவில் உபதபாலகம் இடமாற்றம்

உடுவில் உப தபாலகம் சென்ற வாரத்திலிருந்து இடமாற்றப்பட்டுள்ளது. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தனியார் வீடொன்றில் இயங்கிவந்த இந்த உப தபாலகம் தற்பொழுது முன்னர் இயங்கிவந்த வீட்டுக்கு அருகிலுள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. (101)

### உடுவில் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம்

(உடுவில்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான அதிபர்கள் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுமென கோட்டக் கல்வி அதிகாரி செ.குபேரநாதன் அறிவித்துள்ளார். (101)

### விஞ்ஞான ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

வலிகாமம் வலய பாடசாலைகளில் உள்ள தரம் 9, 11 வகுப்புகளுக்கான விஞ்ஞான செயற்திட்ட ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் - எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இராமநாதன கல்லூரி மணடபத்தில் நடைபெறும் என விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவிததுள்ளார். இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (101)

### விதவைகளின் விபரங்கள் திரட்டல்

வலி.தெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சணவனால் கைவிடப்பட்ட, கணவனை இழந்த பெண்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் உடனடியாக தமது பகுதி கிராம அலுவலரிடம் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

பதிவு செய்யவரும்போது அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் (கணவன் இறந்திருந்தால்), திருமணப் பதிவுச் சான்றிதழ் என்பவற்றைக் கொண்டுவருவமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடமாடும் சேவை

சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட வடமராட்சி மற்றும் மருதங்கேணிப் பகுதியிலுள்ளவர்களுக்கு இலவச நடமாடும் அடையாள அட்டைகள் வழங்கும் செயற்திட்டம் மார்ச் மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இந்த இலவச நடமாடும் அடையாள அட்டை வழங்கும் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு கொழும்பு ஆட்பதிவுத் திணைக்களத்தில் இருந்து அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி யாழ்.மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளது.

வருகைதரும் இந்தக் குழு யாழ்.செயலக ஆட்பதிவுத் திணைகள அதிகாரிகளுடன் இணைந்து வடமராட்சி, மருதங்கேணி பகுதிகளுக்கு நேரில் சென்று மார்ச் 5, 6 ஆம் திகதிகளில் இலவச நடமாடும் அடையாள அட்டை வழங்கும் சேவையை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே, மேற்படி பிரதேசங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டு, தமது அடையாள அட்டைகளை இழந்த மக்கள் - கிராம அலுவலர் ஊடாகவோ அல்லது பிரதேச செயலகங்களிலோ, அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களைப்பெற்று அதைப் பூர்த்திசெய்வதுடன், அடையாள அட்டை இழந்தவரின் புகைப்படம், அடையாள அட்டை சுனாமியால் தொலைந்தது என பொலிஸாரின் அறிக்கை என்பவற்றுடன் இலவச நடமாடும் சேவையில் பங்குகொண்டு தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

விண்ணப்பதாரி கொண்டுவரும் புகைப்படத்துக்கான பணமும், முத்திரைக்கான பணமும் இலவச நடமாடும் அடையாள அட்டை வழங்கும் அதிகாரிகளால் வழங்கப்படும் எனவும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### வலைப்பந்தாட்டப் போட்டி

உடுவில் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப் பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கரப்பந்தாட்டப் போட்டிகள் 26 ஆம் திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## மழலைகள் ஆங்கில ஊற்று விண்ணப்பங்கள் கோரல்!

யாழ்.மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பு - முன்பள்ளி முதல் ஆண்டு 5 வரையுமான மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேச்சு, எழுத்து, வாசிப்புப் பயிற்சிகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது. இதற்காக அவுஸ்ரேலியாவிலிருந்து விசேடமாக ஆங்கில ஆசிரியர் குழுவொன்று குடாநாட்டுக்கு வந்துள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட கல்வித் தரம் கொண்ட மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் - தமிழ் மாணவர் ஒன்றியம், இல.155, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (கம்பன் கோட்டம் முன்பாக) எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அந்த விண்ணப்ப படிவத்தை எதிர்வரும் 17.02. 2005 இற்கு முன்னர் பூர்த்திசெய்து ஒப்படைக்கவேண்டும்.

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், கற்பித்தல்களும், பாடக்குறிப்புகளும் முற்றிலும் இலவசமானது என்பது குறிப்பிடத்தக்கது.




# தண்ணீர்..! தண்ணீர்...!

வேரற்கேணியன்



சிறுகதை

திருச்சிராப்பள்ளி மாநகருக்கு அழகும், வளமும் வழங்கி அல்லும், பகலும் அயராது ஓடிக்கொண்டிருக்கும் காவேரி நதி-அங்கிருந்து ஒன்பது கிலோமீற்றர் தொலைவில், புதிதாக உருவாகிக்கொண்டிருக்கும் புறநகர்வரை குடியேறியுள்ள மக்களின் குடிநீர்த் தேவையையும் நிறைவேற்றுகிறது. நிலத்தின்கீழ் குழாய் வழியாக வீட்டுவாசலில் வந்து விழுகிறது ஆற்று நீர். ஆயினும் அந்த வசதி வாய்ப்பு எப்போதுமே ஏழை, செல்வர் என்ற ஏற்றத் தாழ்வின்றி அனைத்து மக்களுக்கும் கிடைத்துவிடுவதில்லை.

முதன்மை நீர்க்குழாயிலிருந்து வீடுகளுக்கு நீர் பாய்ச்சும் சிறுகுழாய், உதிரிப் பாகங்கள், கூலிஉட்பட செலவு என ஒரு தொகைப் பணம் நகராட்சிக்குக் கொடுக்க, வசதியற்ற ஏழை மக்களுக்குக் காவேரியின் கருணை சற்றே கடினமானதுதான். வீட்டுக்கு வீடு குடிநீர்க்குழாய் வருவதற்கு முன்னர் பவுசர் எனப்படும், வாகனத்தில் பொருத்திய மிகப்பெரும் கொள்கலனில் காவேரிநீர் நிரப்பிவந்து, அனைத்து வீடுகளின் முன்னாலும் குடங்களுடன் குழுமி நிற்பவருக்கு விநியோகித்தனர் மாநகர மன்றத்துப் பணியாளர். இதுதவிர தெருக்களில் தூரம் ஒன்றாக குடிநீர்ப் பைப் நிறுவப்பட்டிருந்தன. மேலும் உள்ளூர்ச் சந்திகளில் ஆளுயரமான, கருநீல பிளாஸ்ரிக் கொள்கலன்கள் கற்பீடத்தில் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் காவேரி நீர் நிரப்பப்படும். இன்று அவை அகற்றப் பட்டுவிட்டன; வீடுகளுக்குக் குடிநீர்க்குழாய் பொருத்தப்பட்டதால் போலும்.

வீட்டு வாசலில் குடிநீர்பெற ஏற்ற ஒழுங்கு செய்யாதவர்களுக்கு முன்னாளில் இருந்த சில தெருக்கரைப் பைப் மட்டுமே இன்று கைகொடுக்கிறது. அனைதது் பைப்களுக்கும் வரும் தண்ணீரை ஒருமணிநேரம் மட்டுமே திறந்துவிடும் தொழில்நுட்பக் கருவிகள் தெருமுனைகளில் அமைந்துள்ளன. நாளும் குறிப்பிட்ட நேரம் திறந்துவிடப்படும் நீரை, மக்கள் வரிசையில் நின்று தங்கள் குடங்களில் நிரப்பிக்கொள்வர்.

இத்தகைய ஏற்பாடுகளுக்குப் பின்னரும், இங்கே குடிநீர் விநியோகிப்பதில் குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. நேரம் தவறித் தண்ணீர் திறந்துவிடுதல், நீர் பாயும் குழாயில் எந்த இடத்திலும் வெடிப்பு ஏற்பட்டால் அது திருத்தம் செய்யப்படும்வரை, குடிநீர் கிடைப்பதில் தாமதம், சிலர் போத்தலில் அடைத்து விற்கப்படும், தூய்மைப்படுத்தப்படும் தண்ணீரை வாங்கிக்குடிப்பர். அது எல்லாருக்கும் இயலுமா என்ன!

விசாலாட்சி தெருப்பைப் அருகே குடிநீர் வருகையை எதிர்பார்த்திருக்கிறாள்.

அவள் அருகில் சில பெண்கள்; பல வயதினர்.

சிறுவர், சிறுமியர் தங்கள் குடங்களை வரிசையில் வைத்துவிட்டு விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். ஆண்களும் சிலர்; ஒரு பக்கத்தில்.

"என்ன இன்றைக்கு வேலைக்குப் போகேல்லையா?..." அருகில் இருந்த கல்யாணியைப் பார்த்துக் கேட்டாள் விசாலாச்சி.

''இல்லையக்கா... இன்றைக்குப் போகேல்லை... எப்பவும்தான் வேலை... இன்றைக்குத் தண்ணிய எடுத்து வைச்சிட்டு உச்சிப் புள்ளையார்ட்ட போகலாம்னு இருக்கேன்..."

"யாரோட கூடிட்டுப் போறே?..."

அவள் கேட்டது கல்யாணியை என்றாலும், பார்த்தது சிவசேகர் என்ற இளைஞனை.

அவன் ஆண்கள் பக்கம் நிற்கிறான்.

"என்ன?" என்பதுபோல் விசாலாச்சியைப் பார்த்தான் அவன்.

"கோயிலுக்குப் போறீங்களாமே?...

பொழுதுபோக்காக ஒரு சர்ச்சையைத் துவக்கிவைத்தாள் விசாலாச்சி.

''பேச்சுக்கு வேற ஆளில்லையா?..." என்று கடிந்தான் சிவசேகர்.

கல்யாணி - சிவசேகர் விவகாரம் அங்கு இருந்த சிலருக்குத் தெரிந்த விடயம்.

ஒருவன் புன்சிரிப்புடன் சிவசேகர் தோளில் கை வைத்தான்.

கல்யாணி தலை குனிந்தாள்.

''நேற்று தண்ணீர் வரேல்லை... இன்றைக்கும் வராட்டா என்ன செய்யலாம்..." சிவசேகர் கதையை மாற்றினான்.

''இன்றைக்கும் வராட்டா... சாலை மறியல்... அதுதான் சரியான போராட்டம்..." என்றாள் விசாலாச்சி.

எல்லாரும் சிரித்தனர்; என்ன போராட்டமா? என்று கேட்டனர்.

"வேணாம் அக்கா..." கல்யாணி அச்சம் காட்டினாள்.

"அதுக்கு நான் தயார்... நீங்கதான் தலைவி... முன்னாலை இருக்கணும் சரியா?... - என்றான் சிவசேகர்.

இங்க இருக்கிறவங்க எல்லாரும் ஒத்துமையா வருவாங்களா?... சாலை மறியல் செய்ய..."

"நான் வர்ரேன்... வர்ரேன்..." சில குரல்கள் கேட்டன. மீதிப்பேர் மௌனம் காத்தனர்.

''பொலிஸ்காரங்க வந்து குண்டாந்தடியை வீசி... விளாசி... இழுத்து ட்றக்ல தூக்கிப்போட்டு..., பொலிஸ்ரேசன்ல கொண்டு போய் நல்லா சாப்பாடு தருவாங்க..." - புன்னகைத்தாள் கல்யாணி.

"கல்யாணிக்கு பயம்னா வரவேணாம்... பாவம் அவ வீட்டுக்குப் போவட்டும்..." என்றான் சிவசேகர்.

"இல்லக்கா... நீங்க போறதானா நானும் வர்ரேன்" என்றாள் கல்யாணி. இதைக்கேட்டு சிவசேகருடன் நின்ற இளைஞர்கள் சிரித்துச் சத்தமிட்டனர்.

நேரம் பத்து மணியாவுது... வாங்க போகலாம்..." என்று எழுந்த விசாலாச்சி குடங்களை எடுத்துக்கொண்டு நடந்தாள். கல்யாணி அவள் கையைப் பற்றிக்கொண்டாள்.

"வாங்கடா வாங்க..." என்று பாடியபடி பின்தொடர்ந்தான் சிவசேகர்.

நாலைந்து பேரைத்தவிர, எல்லாரும் பெருந்தெருவை நோக்கி நடந்தனர்.

கைவிரல்கள் வெற்றுக் குடங்களில் தாளமிட்டன.

தண்ணீர்! தண்ணீர்! தாகத்துக்குத் தண்ணீர்! காவேரித் தண்ணீர்! என்று உரத்துக் குரல் எழுப்பியபடி போய்க்கொண்டிருந்தனர்.

பைப் அருகே பின்தங்கியவர்களும் எழுந்து ஓடிவந்து ஓரணியில் கலந்து கொண்டனர்.

வீடுகளில் இருந்தோர் விரைந்து வந்து எட்டிப் பார்த்தனர்.

யாரும் கேளாமலே "சாலை மறியலுக்கு வாங்க! வாங்க! மூன்று நாளாப் பைப்ல தண்ணீர் வரல்ல..." என்றனர்.

தெருக்களில் நின்றோர், ஏன்? எதற்கு? என்று கேட்பதுபோல் ஒருவரையொருவர் பார்த்தனர்.

என்றுமில்லாத போராட்டம் இந்தத் தெருவில்.

தண்ணீருக்கா! காவேரித் தண்ணீருக்கா! போர்ப்பரணி ஒலித்தது.

≈ ≈ ≈

சாலையின் குறுக்கே முன்வரிசையில் விசாலாச்சியும், கல்யாணியும் பிற பெண்களும். அதே வரிசையின் ஓரத்தில் சிவசேகரும் அவன் நண்பர்களும். கல்யாணியைப் பார்த்து "பின் வரிசையில் போய் இரு" என்று சைகையில் சொல்லிப் பார்த்தான் சிவசேகர். அவள் கவனிக்காததுபோல் இருந்துகொண்டாள்.

தண்ணீர்! தண்ணீர்! காவேரித் தண்ணீர்!- பல குரல்கள் ஒன்றாய் ஒலித்தன. குடங்கள் தலைக்குமேல் உயர்ந்தன. அவற்றில் அவர்களின் கைவிரல்கள் தாளமிட்டன.

ஒரு பேருந்து வந்து முன்வரிசைப் பெண்களை முட்டினாற்போல் நின்றது. அச்சம் மேலிட்டது. அலறவில்லை யாரும்.

பேருந்திலிருந்து இருவர் இறங்கி வந்தனர்.

உயர் அதிகாரிபோல் தோற்றமளித்த ஒருவர், முன்வரிசையில் அமர்ந்திருந்த பெண்ணிடம் கேட்டார், "ஏன் இந்த மறியல்?"

"வெறும் குடங்களோடு உட்கார்ந்திருக்கிறமே புரியவில்லையா?, சார்?" - விசாலாச்சி கேட்டாள்.

தண்ணீர்! தண்ணீர்! காவேரித் தண்ணீர்!- எல்லாரும் ஒரேகுரலில் பதிலளித்தனர்.

கேட்டவரும், அவர் பின்னால் நின்றவரும் விலகிச்சென்று எதையோ தேடுவதுபோல், அங்குமிங்கும் பார்த்தனர். ஒருவர் அங்கேயே நிற்க மற்றவர் மேலும் சென்றார்.

சற்றே தூரத்தில் ஒரு அடுக்குமாடிக் கட்டடம். அதன் சுவரில், "தண்ணீர்! தாகத்துக்குத் தண்ணீர்! இல்லை. காவேரி வற்றிவிடவில்லை. எங்கள் குறைகேக்க யாரும் இல்லை." என்று கரித்துண்டினால் எழுதிவிட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தான் ஒரு இளைஞன்.

"ரெலிபோன் பூத் எங்கேப்பா இருக்கு?"- அவனிடம் கேட்டார் பஸ்பயணி.

"அந்தா இருக்குசார்... இப்பத்தான் திறக்கிறாங்க..." தான் எழுதிவிட்டு வந்த சுவர்ப் பக்கம் காட்டியவன் சிறிது தூரம்வந்து, ஓரமாய் நின்று அந்த மனிதரை அவதானித்தான்.

அவர் ரெலிபோன் பூத்ல நுழைந்தார். சில நிமிடங்கள் செல்ல, திரும்பி வந்தார்; பேருந்தில் ஏறிக்கொண்டார்.

அதுவரை அங்கேயே நின்ற இளைஞன் போய் சாலை மறியலில் இருந்துகொண்டான்.

மேலும் இரண்டு பேருந்துகள் வந்தன. ஒன்றன்பின் ஒன்றாய் நின்றன. ஆட்டோக்கள் வந்தன. ஓரமாய் நின்றன. சைக்கிள், மோட்டார் சைக்கிள் வந்தன; சாலையின் ஓரத்தே மெல்ல ஓடி அப்பால் சென்றன. நடைபயணிகள் சிறிது நேரம் நின்று பார்த்துவிட்டுப் போயினர்.

≈ ≈ ≈

ஜீப் ஒன்றும் அதன் பின்னால் ட்றக் ஒன்றும் வந்தன. அவற்றில் பொலிஸார் இருந்தனர்.

தண்ணீர்! தண்ணீர்! தாகத்துக்குத் தண்ணீர்! காவேரித் தண்ணீர்! முன்வரிசையில் இருந்த பெண்கள் முழக்கமிட்டனர்.

மறுகணம் -

எங்கிருந்தோ ஒரு தெருக்கல் வந்து பேருந்தின் முகப்புக் கண்ணாடியில் விழுந்தது. கண்ணாடி சிலந்திவலைபோல் உருமாறியது. பேருந்தில் இருந்தவர்கள் ''அய்யோ...' என்றலறித் தலைகுனிந்து இருக்கைகளின் கீழ் பதுங்கிக்கொண்டனர்.

"பொலிஸுக்குப் போன் பண்ணினவன் உள்ளேதான் இருக்கான். எறிடா..." ஒருவன் சத்தமிட்டான்.

"கல் எறியவேணாம்..." விசாலாச்சி எழுந்து நின்று சொன்னாள். அவள் அமர்ந்ததும் கல் ஒன்று 'சிலந்திவலையை'த் துளைத்துக் கொண்டு உள்ளே விழுந்தது. கூக்குரல்கள் எழுந்தன. கண்ணாடிச் சிதறல்கள் பயணிகளைத் தாக்கவில்லை. அவர்கள் சீற் அடியில்.

விசாலாச்சி திரும்பவும் எழுந்து சத்தமிட்டாள்: வன்செயல் வேணாம்... எறிய வேணாம்... என் சொல்லைக் கேட்காட்டா... எங்க போராட்டம் தோல்வி..."

அமைதி நிலவியது.

பொலிஸார் ட்றக்கிலிருந்து குதித்து குண்டாந்தடிகளை சுழற்றியபடி முன்னேறினர்.

"நீங்க யார் மேலயும் கைவைக்கக்கூடாது. எதுக்கும் நானே பொறுப்பு... என்னோட பேசுங்க... வேணும்னா என்னயே அரெஸ்ட் பண்ணுங்க..."

விசாலாச்சியின் வீரவசனம் கேட்டு, ஜீப்ல இருந்த இன்ஸ்பெக்ரர் இறங்கி வந்தார்.

"நீங்கள் சாலைமறியல் செய்கிறதானா அமைதியாய் உட்கார்ந்திருக்கணும்... கல் எறிஞ்சு பஸ் வண்டியை உடைக்கலாமா?... பஸ் பயணிகளும் உங்களைப்போல மனிதர்கள் இல்லையா?... உங்க எல்லாரையும் அரெஸ்ற் பண்ண..."

இடைமறித்தாள் விசாலாச்சி.

இன்ஸ்பெக்டர் சார்... கோபிச்சுக்காதீங்க... நாங்க உங்களை வாங்கின்னு கூப்பிடல்ல... நீங்க வந்ததால இளசுகள் யாரோ கல் எறிஞ்சிட்டான்க... குத்தம்தான்... ஆனா இந்த நெலமைக்கு நாம வரக் காரணம் யாரு.. அவரவர் கடமையை சரியாச் செஞ்சா நாம இன்னைக்குத் தெருவுக்கு வந்திருப்பமா?..."

அவளுடைய சொல்வீச்சின் உட்பொருள் உணர்ந்தவர்போல், இன்ஸ்பெக்ரர் சொன்னார்-

''சரி எழுந்திருங்க... வண்டியெல்லாம் காத்திட்டிருக்கு... ஓரமா வாங்க... உங்க கோரிக்கையச் சொல்லுங்க..."

"சார் எங்க கோரிக்கையை நீங்க கேட்டு என்னசெய்ய முடியும் உங்களால?...

"நீ என்ன பேசுகிறாய்... இந்தா எஸ்.ஐ. இவனை அரெஸ்ட் பண்ணு..." என்றார் இன்ஸ்பெக்டர்.

அதேநேரம் -

"தலைவர் அய்யா வர்ரார்டா..." சத்தமிட்டவன் சிவசேகர்.

இன்ஸ்பெக்ரர் திரும்பிப் பார்த்தார். வந்தவர் கருப்பையா.

இன்ஸ்பெக்ரர் சார்... எங்க கவுன்சிலர் வர்ராரு, அவரையும் வைச்சுப் பேசிடலாம்... அவருதான் இந்த வார்ட் மெம்பரு... அவருக்குத்தான் நாங்க ஓட்டுப் போட்டமே... உங்கட வேலையெல்லாம் எங்கள அரெஸ்ட் பண்ணிறது... அடிச்சு, உதைச்சு... சித்திரவதை பண்ணிறது... அப்புறம் ஸ்ரேசன்ல நாங்க பேசவே முடியாது... இந்த நாட்டில இருக்கிற சுதந்திரம் அது... இது ஜனநாயக நாடு... மக்களாட்சி... எல்லாரும் இந்தநாட்டு மன்னர்... அப்பிடி என்னென்னவோ எலக்சன் நேரத்தில பேசினாங்க... கேட்டிருக்கேன்... ஆனா வெற்றிபெற்றவங்க அப்புறம் ஏழைக எங்களைத் திரும்பிப் பார்க்கமாட்டானுகள்..."

"நீ அதிகமாப் பேசுறாய் வாயை மூடு..."

விசாலாச்சி பணிவுடன் சொன்னாள்:

"மன்னிக்கணும் சாமி... அந்தா மெம்பரு வர்ராரு அவரையும் கேட்டிடலாம்... நான் பேசுறது அதிகம்தானான்னு..."

கவுன்சிலர் கருப்பையா காரைவிட்டு இறங்கினார். இன்ஸ்பெக்டரும் விசாலாச்சியும் நின்ற இடத்துக்கு விரைந்து வந்தனர்.

''வாங்க சார்..." - இன்ஸ்பெக்டர்.

விசாலாச்சி குறுக்கிட்டாள். கருப்பையாவைப் பார்த்துச் சொன்னாள்; மூணு நாளாய் பைப்ல தண்ணீர் வரல்ல... சார்... நாங்க இந்த ஊர்ல இருக்கிற ஏழையள்... தெருக்கரைப் பைப்பை நம்பி இருக்கிறவங்க... யாரோட பேசுறது. யாரிட்ட முறைப்பாடு பண்றது... ஒன்றும் தெரியாதவங்க... சாலை மறியல் செய்றாங்க. உடனே தீர்வு கிடைக்கும்னு கேள்விப்பட்டிருக்கேன்... நானும் அப்படி செஞ்சிடலாம்னு இவங்கள அழைச்சிட்டு வந்து ரோட்ல உட்கார்ந்திட்டிருக்க... பஸ் வந்துது... பொலிஸ் வந்துது... பார்த்து பெடியள் கல் எடுத்து எறிஞ்சிட்டாங்க... நீங்க இந்த வார்ட் மெம்பரு இதையெல்லாம் தீத்து வைக்கிறது உங்க கடமை இல்லையா சார்..."

''பைப்ல தண்ணீர் வரல்லைன்னா என்னிடத்தில வந்து சொல்லியிருக்கணும்..."

"உங்கள எங்கே பாக்கிறது... உங்க வீட்டுக்கு வந்தா உங்க செக்கூரிற்றி உள்ளே விடமாட்டானாமே..."

"சரி எழுந்திருங்க... ஓரமா வாங்க... வண்டிகளப் போகவிடுங்க..."

"தண்ணீர்! தண்ணீர்! காவேரித் தண்ணீ"

தண்ணீர் பவுசர்ல அனுப்பலாம்... கலைஞ்சு போங்க..."

இன்ஸ்பெக்ரர் கருப்பையாவைப் பார்த்துச் சொன்னார்; "பஸ் எல்லாம் டமேஜ் பண்ணிட்டாங்க... எல்லாரையும் அரெஸ்ட் பண்ணணும்... அரெஸ்ட் ஆல்..." பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பின்னால் நின்ற இளைஞரெல்லாம் சத்தமிட்டார்கள்; வரமுடியாது... வரமுடியாது...

கருப்பையா, நிலைமை மோசமடைவதைக் கண்டு, மெல்ல நகர்ந்தார், காரில் ஏறிக்கொண்டார்.

பொலிஸ்காரர் எல்லாவற்றையும் சுற்றி வளைத்தார்கள். அதனையும் மீறி சிலர் ஓடித் தப்பி, குறுக்குத் தெருக்களில் பாய்ந்து மறைந்தார்கள். அப்படி ஓடிய ஒருவனைத் துரத்திப் பிடித்த ஒரு பொலிஸ்காரன்..." இவன் சிலோன்காரன்... ஏறுடா ட்றக்ல..." என்றான் இன்ஸ்பெக்ரரைப் பார்த்தபடி.

இதனைப் பார்த்துவிட்ட விசாலாச்சி, "சிலோன் காரன்னா தண்ணீர் குடிக்கிறதில்லையா?... விடு அவனை... அவன் வருவான்... நாங்க எல்லாருமே வர்றம்... எங்கள என்னதான் செஞ்சிடுவீங்கன்னு பாத்திடலாம்.

## வலியும் சில வரிகளும்



கூலிப் படைக்கு
தமிழ் மண்ணோடு உறவு
கிடையாது
தேசத் துரோகிக்கு
தாயின் உறவுமுறை
தெரியாது.

போர்த்திவிட்டு குளிர்காயவும்
எச்சில் சோற்றில்
காவு கொள்ளவும் முடிகிற
போது
சூடு இல்லாமல்
தணிந்து கொண்டிருக்கும்
சந்தர்ப்பங்களுக்குத்
தாவிப் பாயவும் முடிகிற
போதுதான்
கோழைத்தனம்
உயிர் பெறுகிறது.

அரசியல்(ப்) போராளிகளைச்
சுட்டதால்
அமைதி கேள்விக்குறியாகி
பேச்சிழந்து போயுள்ளது.

குறிக்கோள்
அதனுள் தெளிவுபடுகின்ற
முடிவு
முயற்சி
வீண் போகாத செயற்பாடுகள்
எல்லோரையும்
அடையாளப் படுத்த தவறியதில்லை.

திணிப்பின் செயற்பாடுகள்
தன்னையும் இழக்கின்ற
முடிவு
வீணான முயற்சியாக
யாரையும்
அடையாளப் படுத்த முடியவில்லை.

தமிழ் மண்ணையும்
அன்னையையும்
கூடுதலாக நேசித்ததால்
வாளின் கூரின் முனையில்
நின்றாலும்
தவறி விழாது
வீரத்தை
கைப் பிடித்த போராளிகளுக்கு
வலி தெரியாது.

சொறியவும்
உராயவும்
தட்டிப் பார்க்கவும் முடிகிற
எதிரியால் தான்
ஓடவும் முடிகிறது.

செல்வா

பொறுமையும்
கடமை உணர்வும் உள்ள
போராளிகளால் தான்
விரட்டவும் முடிகிறது.

## காதல் ரோஜாவே

இன்பத்தின் நிழலில்
இரண்டறக் கலந்துவிட்ட
பூவும்
வண்டைப் பிரிந்தே
தொலைகிறது.

இருப்பினும் வாசங்களை
வழங்காமலில்லை
அதேபோல் தான்
நிலவின் மழையில்
நனையும் நம்மையும்
நம் காதலையும்
மறுநாள் சூரியன்
சுவட்டிடாமலில்லை.

காலங்கள் தான் போகிறது
நம் காதல் போகவில்லையே
பிரிவு என்ற மூன்றெழுத்தில்
தவிக்கும் நம்மை
இந்தக் காதலர் தினம்
சேர்த்து வைக்கும்
அச்சமின்றியே ஓடிவா
என்னிடத்தே.

துஷி




***தேவதைகள்*** பூமிக்கு வருவதில்லை என்பதெல்லாம் காதலிக்காதவர்கள் சொல்லி வைத்த பொய்கள் .

காதலை ஏற்றுக்கொள்கிற ஒவ்வொரு பெண்ணும் தேவதையாகிறாள். தேவதையாக விரும்பாத பெண்கள் எங்கே இருக்கிறார்கள்? குழந்தைக்குத் தாயின் கருவறையைப் போல வாலிபத்துக்கு ஓர் ஆறுதலான நிழல்.. காதலைவிட வேறு என்ன இருக்கிறது?

இந்தப் பூமியின் முக்கால் பாகம் கடலால் அல்ல காதலால் தான் நிரம்பியிருக்கிறது. பூமிக்கு வியர்க்கும் போதெல்லாம் காதல் கடிதங்கள் தாம் விசிறிகளாகின்றன.

வயலினும், புல்லாங்குழலும் தரமுடியாத புத்துணர்வின் இசையை வளையல்களும், கொலுசுகளும் இசைக்கின்றன.

வாழ்ந்தாக வேண்டும் என்கிற நம்பிக்கையை வாழ்வியல் நூல்களைக் காட்டிலும் காதலியின் கண்களே அதிகம் போதிக்கின்றன.

பாதைகளில் தான் சிற்பங்கள் செதுக்கப்படுகின்றன. ஆனால், பாறைகளையே சிற்பங்களாகப் பார்க்கிற அழகு காதலுக்குத்தான் வாய்த்திருக்கிறது.

ஆதாமும் ஏவாளும் இதழ்கள் கவ்வி எச்சில்படுத்தி உண்டதால்தான் அப்பிள் இன்னும் இனித்துக் கொண்டிருக்கிறது.

காதல் வாழ்வதால் தான் தாஜ்மகால் என்ற கல்லறை கூட உயிருள்ள கட்டடமாக உயர்ந்து நிற்கிறது.

திடீரென்று ஒரு வண்ணத்துப் பூச்சி - ஓடும் தொடர் வண்டிப் பெட்டிக்குள் வந்து தவித்து மறுபடியும் வெளியேறிக் காற்றோடு கலந்து விடுவது மாதிரி எனக்குள்ளும் சில காதல் அனுபவங்கள் உண்டு. அவை காதல் தானா என்று அப்போது எனக்குத் தெரியாது.

வண்ணங்கள் குழைத்தும், கலைந்தும் விளையாடிய இளமையின் வானவில் பொழுதுகள் அவை.

பள்ளி நாட்களில் ஒவ்வொரு நாள் வழிபாட்டுக் கூட்டத்திலும் எனது வகுப்பின் வரிசையில் நான் தான் முதல் மாணவனாக நிற்பேன். நான் அ..வ்...வ..ள..வு உயரம் அதேபோல பெண்கள் வரிசையிலும் எ..ன்..ன..ள..வு உயரமுள்ள பெண்கள் நிற்பார்கள்.

அப்படி எனக்கு எதிரே நின்ற ஒரு மாணவியின் பெயர் அமுதா. இப்போது பெயர் மட்டுமே அவளது முகமாய் நினைவில் நிற்கிறது. அவள் எனக்கேற்ற உயரத்தில் இருந்தாலேயே அவள் தான் என் காதலி என்று உள்மனம் சொல்லியது. சக மாணவர்களும் உயரத்தைப் புகழ்ந்து புகழ்ந்தே என்னை அவளது காதலனாக்கினார்கள். ஆனால், அது அவளுக்குத் தெரியாது இந்த விடலைப் பருவத்தில் எனக்குத் தெரிந்த காதலின் அர்த்தம் உயரம்.



மேனிலை வகுப்பில் நான் தான் மாணவர்களிடையே கவனத்திற்குள்ளானவன். என் கவிதைகளும் இலக்கியப் போட்டிகளில் நான் வாங்கிய பரிசுகளும் எனக்கு அந்தத் தகுதியை வழங்கியிருந்தன அப்போது சில பெண்களை எனது இளமை எட்டிப் பார்த்தது. ஆனால் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. பார்வையில்கூட நம் காதலை வெளிப்படுத்தி விடக்கூடாது என்ற அச்சத்தில் கமுக்கமாகவே அவர்களை ரசித்தேன். அதற்குக் காரணம் பள்ளியில் நான் ஒழுக்கமான மாணவன் என்று எடுத்த பெயர். காதலென்றால் ஒழுக்கத்துக்கு எதிரான செயல் – அப்போது தெரிந்த காதலின் அர்த்தம் அதுதான்.

பள்ளியை விட்டு வெளியேறிய சில ஆண்டுக ில் சக நண்பர்களோடு மாலைநேர அரட்டை பெண்களைப் பற்றியே அதிகம் பேச்சு வரும். அன்று காதலின் அர்த்தம் பொழுதுபோக்கு.

பின்னாளில் இலக்கியத்தின் தோளில் நான் சாய்ந்து கொண்டபோது தான் காதலின் சுகம் மெல்ல மெல்ல என்னுள் பரவியது.

டால்ஸ்டாய் காதலித்தார். வான்கா காதலித்தார், வால்ட் விட்மன் காதலித்தார். லெனின், மாவோ, மாப்பசான், பெர்னாட்ஷா, நெப்போலியன், பாரதி என்று ஒவ்வொரு மேதையையும் ஒவ்வொரு வீரனும் ஒவ்வொரு கலைஞனும் காதலித்திருக்கிறார்கள்.

காதல் என்றால் வாழ்வின் வெளிச்சம் – வழிகாட்டல் என்கின்ற அர்த்தம் அப்போது தான் தெரிந்தது. 'ஒரு பெண்ணின் சிவந்த உதடுகளைக் காட்டிலும் நான் கம்யூனிஸ்ட் கட்சிக் கொடியின் சிவப்பு நிறத்தை அதிகம் நேசிக்கிறேன்.' என்று சொன்ன ரஷ்யாவின் புரட்சிக் கவி விலாடிமின் மயாகோவ்ஸ்கி காதல் தோல்வியில் தான் செத்துப்போனார்.

காதல் வாழ்க்கை மட்டுமல்ல இறப்பும் அது தான்.

சில பொழுதுகளில் இப்படித்தான்... தேவதைகள் கறுப்பு அங்கிகளைப் போர்த்திக்கொண்டு வந்து நம்மை இருட்டுக்குள் தள்ளி விட்டுப் போய்விடுவார்கள்.

பூக்கும் என்று தெரிந்தால்.. குறிஞ்சிக்காகப் பன்னிரண்டு கண்கள் அல்ல, ஆயுள் முழுவதும் கூட காத்திருக்கலாம். ஆனால் பூக்கவில்லை என்றால், அந்தச் சோகத்தை எங்கே போய்த் தொலைப்பது?

காதல் அப்படித்தான்...

வென்றால் பெயரே கவிதையாகி விடுகிறது...

தோற்றால் முகவரியே தொலைந்து போய்விடுகிறது.

ஒரு காதல் கண்ணீர்த் துளிகளைச் சிரிக்க வைத்துப் பார்க்கிறுது. இன்னொரு காதல் உதடுகள் உப்புக் கரிக்க முத்தங்களால் அழுது விடைபெற்றுக்கொள்கிறது.

கண்களில் தொடங்குவதால் காதலோடு கண்ணீரும் கூடவே இருக்கிறதா?

'இந்தத் துக்கம்
எனக்குப் பிடித்தது
காரணம்
இது
நீ தந்தது.'

என்கிறான் உருதுக் கவிஞன்

துக்கமாக இருந்தாலும் பரவாயில்லை, அதைக் காதலியின் மூலமாகப் பெறவேண்டும் என்று துடிக்கிற காதலின் இதயத்தை யாரால் நிறுத்த முடியும்?

தொடர் வண்டிப் பயணத்தில் ஒருத்தி கண்களாலேயே என்னைத் துளித்துளியாய்ப் பருகிக்கொண்டே வந்தாள். இறங்கிப்போகும் கடைசி நிமிடத்தில் என்னோடு பேசினாள். முகவரியைக் கேட்டு வாங்கிக் கொண்டாள்.

குடித்து முடித்துவிட்ட பிளாஸ்டிக் தேநீர்க் கோப்பையை யன்னலால் வீசியெறிந்து விடலாம். கண்களை என்ன செய்வது? யோசித்துப் பார்த்தபோது...

'உன் பார்வைகளை
எனக்குத் தெரியும்
பொரி போட்டு
விளையாடி
என் மீன்களின் பசியை
வேடிக்கை பார்க்காதே'

என்று ஒரு கவிதையில் மூடி வைத்தேன் அந்தக் காதலை.

வெளிப்படுத்தி வாழ்கிற காதலைக் காட்டிலும், சொல்லாமல் வாழ்கிற காதல்கள் தான் இங்கே நிறைய இருக்கின்றன.

கடலும் மலையும் வானமும் வெளியே இல்லை, உள்ளுக்குள் தான் இருக்கின்றன.

என்ற உத்வேகத்தை காதல் தான் ஊட்டி வளர்க்கிறது.

நிலவின் பின் பக்கத்தை ஒரு முறையாவது பார்த்துவிடவேண்டும்.

மேகங்களுக்குப் பின்னால் மிதந்துகொண்டே அலை என்ன பேசிக்கொள்கின்றன என்று கேட்டு வர வேண்டும்.

புல்நுனியில் பனித்துளி உட்காருகிற அந்தக் க ்சி நொடியைப் படம் பிடிக்க வேண்டும்...

முடிந்தால் விண்ணில் விண்மீன்கள் நடுங்காமல் மண்ணில் ஒரு மலர் பறித்து அவளுக்குக் கொடுக்க வேண்டும்...

இயற்கையை விதவிதமாய் ரசிக்க வைக்கிற நேசத்தைக் காதல் தான் வளர்க்கிறது.

ஒற்றைத் தண்டவாளம்
ஒரே ஒரு சிறகு
ஒற்றைக் கொலுசு

இந்தத் தனிமை எவ்வளவு துயரமானது. காதல் தான் இவற்றையெல்லாம் இயங்க வைக்கிற இரண்டாவது தண்டவாளம். இரண்டாவது சிறகு, இரண்டாவது கொலுசு.

காதலின் தொடக்கம் கண்களாக இருக்கலாம். ஆனால், அதன் முடிவு கல்யாணம் மட்டுமல்ல, அதற்கும் அப்பால்....

காதலைக் காதலித்து, காதலித்து வாழ்த்துவோம்.

கவிஞர்: பழநி பாரதி

## தேடலும் பகிர்தலும்

### ஒரு வாசகனின் மரணம்

ரயிலுக்காக காத்திருக்கிறான் ஒருவன். வண்டி வரும்வரை பொழுதுபோக வேண்டுமே என்பதற்காகக் கையில் கிடைத்த அந்தப் புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியவன் அதில் தன்னை மறந்து ஆழ்ந்து விடுகிறான். அதை முடித்துவிட்டுப் பார்க்கிறபோதுதான் ரயிலைத் தவறவிட்டிருக்கிற விஷயம் அவனுக்குப் புரிகிறது.

இப்படித்தன்னை ஈர்த்து உலகையே மறக்க வைத்த அந்தக்கதையைப் படிக்கும் வாய்ப்பு அவனுக்கு ஏற்படுகிறது. ஏறத்தாழப் பத்தாண்டுகளின் பின்னர் அரைவாசிக்கு மேல் அவனால் தொடர முடியவில்லை. இதற்காகவா அப்போது ரயிலையும் தவற விட்டேன்? என்று அதை அப்பால் வைக்கிறான்.

'ஒரு வாசகனின் மரணம்!' என்ற இக் கதையில் என்ன நிகழ்கிறது? அதே புத்தகம், அதே வாசகன். எனினும், அதே லயிப்போ, ஈர்ப்போ பின்னர் இல்லை. ஏனெனில் இப்போது அவன் அதே மனிதனில்லை. காலங்கள் அனுபவங்கள் மாற பார்வையும், ரசனையும் மாறியிருக்கின்றன. பழையவன் இறந்தாயிற்று.

இந்தக் கதையை நான் படித்தும் இப்போது கிட்டத்தட்டப் பத்தாண்டுகளாகப் போகின்றன என்பதால் இதுதான் அச்சொட்டான சுருக்கம் என்று கூறமுடியாதுள்ளது. எனினும், கதையின் கருவும், தொனியும் நன்றாகவே இன்னமும் மனதில் பதிந்துதான் உள்ளன.

ஏதோ ஒரு இந்தியமொழியிலிருந்து ஆங்கிலத்துக்குப் பெயர்க்கப்பட்டு இந்திய இலக்கியம் என்ற ஆங்கிலப் பருவவெளியீட்டில் பிரசுரமானகதை. வெளியிட்டவர்கள் இந்திய சாகித்ய அக்கடமி என்றும் நினைவு. இவற்றை சரிபார்க்க முடியாத இயலாமை போர்ச்சூழலில் இழக்க நேர்ந்த புத்தகங்களில் அதுவும் ஒன்றாயமைத்தது.

எனினும், இந்த வெளியீட்டை அல்லது அதில் வந்த மொழிபெயர்ப்புகளை அவ்வப்போது அனுப்பி வந்த இலக்கிய நெஞ்சத்தவர் பற்றி இங்கு குறிப்பிடவேண்டும். மே. சு. இராமசுவாமி என்ற அப்பெரியவர் நவீன தமிழிலக்கியங்களை ஆங்கிலத்தில் பெயர்க்கும் பணியில் கணிசமான பங்களிப்பினை ஆற்றிவந்த ஒருவர் ஓய்வுபெற்ற நீதிபதி.

ஜெயகாந்தன், ஜெயமோகன் சுப்ரபாரதி மாணியன், மா.அரங்கநாதன் போன்ற பலரின் சிறுகதைகளையும் நீல.பத்மநாபன், நகுலன், நா.விச்வநாதன் போன்றோரின் கவிதைகளையும் மொழிபெயர்த்து வெளிக்கொணர்ந்தவர். ஓவியக்கலை பற்றி அவர் எழுதிய நூலொன்றும் வாசகர் வட்ட வெளியீடாக எழுபதுகளில் வந்த ஞாபகம்.

தான் மொழிபெயர்த்த எனது கதையொன்றினை வெளியிட அனுமதிகோரி அவர் எழுதிய கடிதத்துடன் ஆரம்பமான உறவு இடம்பெயர்வின் பின்னரும் இரண்டாண்டுகள்வரை நீடித்தது அன்னார் காலமாகும் வரை.

1987 இல் ஈழமுரசில் வெளியான எனது அந்த 'யுகங்கள்' என்ற கதை, அடுத்த ஆண்டு பிரசுரமான இன்னொரு வெண்ணிரவு தொகுப்பிலும் இடம்பெற்றிருந்தது. எனினும் திரு மே.சு.இராமசுவாமியவர்களுக்கு அக் கதை சந்திக்க நேர்ந்தது. திரு. எஸ்.சங்கரநாராயணன் தொகுத்து 1994 டிசம்பரில் வெளியிட்ட 'பரிவாரம்' என்ற தொகுப்பின் மூலமாகும்.

தற்காலத் தமிழின் சிறந்த சிறுகதை ஆசிரியர்களிலொருவரான சங்கரநாராயணன் 'சமகால இலக்கியப் போக்குகளை அறியவும் நுட்பமான பல்வேறு சுவைகளை அவற்றிற்கிடையேயான மாறுபாடுகளை உய்த்துணரவும் புதிய கர்த்தாக்களை அடையாளங்காணவும் மதிப்பீட்டு ரீதியான சுயதேர்வு அளவு கோல்களை வாசகர்களைக் கொள்ளவும்' என்ற நோக்கில் திரட்டிய பரிவாரம் தொகுப்பில் – மேலும் செ.யோகநாதன், மா.அரங்கநாதன், செ.சங்கர்பாபு, நாஞ்சில்நாடன், பவா சமத்துவன், ம.காமுத்துரை' லா.ச.ரா, என்.ஸி.அனந்தாச்சாரி, இந்துமதி, தீஸ்மாஸ் டி செல்வா, வத்லமலா, தேனி, சீருடையான், ம.ந.ராமசாமி, எஸ். சங்கரநாராயணன், வண்ணதாசன் ஆகியோரின் கதைகளுமாக மொத்தம் பதினாறு ஆக்கங்கள் இடம் பெற்றிருந்தன. அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் வெளியிட்ட இத் தொகுப்பிற்கு, பிரபல விமர்சகர் பி.சுந்தரேசன் விரிவான முன்னுரையொன்றை ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்.

– சாந்தன்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று கண்டனக் கூட்டங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட்ட 04 போராளிகளினதும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சந்திரநேருவினதும் கொலையைக் கண்டித்து, மாபெரும் கண்டனக் கூட்டமும், கண்டன அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வுகளும் இன்று காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் இடம்பெறவுள்ளன.

தேசிய எழுச்சிப் பேரவையால் ஒழுங்குசெய்யப்பட்டு, நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பொது அமைப்புக்களின் சார்பாக வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணி ஆகியன போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவருக்கும், ஏனையோருக்கும் கண்டன அறிக்கைகள் கையளிக்கப்படவுள்ளன.

இந்த கண்டனக் கூட்டங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர் மண்டபம், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி, ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம், பாண்டியன்குளம் பாலிநகர் சந்தி, மல்லாவி மாவீரர் மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

இந்தக் கண்டனக் கூட்டங்களின் மூலம் சமாதானத்துக்குச் சாவுமணி அடிக்க முயலும் இலங்கை அரசின் வஞ்சகத்தனத்தை உலகுக்கு அம்பலப்படுத்த அனைவரையும் அணிதிரண்டு வருமாறு தேசிய எழுச்சி பேரவையினர் கேட்டுள்ளனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**பெப்ரவரி 14**

1556: மொகலாய வம்சத்தின் சக்கரவர்த்தியான அக்பர் மன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்டார்.

1790: பாஞ்சாலங்குறிச்சி மன்னராக வீரபாண்டிய கட்டப்பொம்மன் அரியணையில் அமர்ந்தார்.

1831: துணிகளில் வடிவங்களைப் பதிக்கும் இயந்திரம், உப்பு நீரில் உப்பை அகற்றும் இயந்திரம், இரும்புக் கடைச்சல் வேலை செய்யும் இயந்திரம் என்பவற்றை உருவாக்கித் தந்த பிரிட்டனின் ஹென்றி மொட்ஸ்லே காலமானார்.

1912: அரிசோனா அமெரிக்காவின் 48 ஆவது மாநிலமாக இணைந்து கொண்டது.

1918: ரஷ்யாவில் செஞ்சேனை அமைக்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

1919: சர்வதேச சங்கத்தின் அமைப்பு விதிகள் 27 நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1950: வானொலி வானியலின் முன்னோடியான அமெரிக்காவைச் சேர்ந்த "கார்ல் குதே ஜோன்ஸ்க்கி" மரணமடைந்தார்.

1963: புவியோடு ஒத்து இயங்குதல், தகவல் தொடர்புகளை மேற்கொள்ளல் ஆகிய இரு செயற்பாடுகளும் இணைந்ததான "சின்ங்காம் - 1" என்ற செயற்கைக்கோள் விண்ணில் செலுத்தப்பட்டது.

1970; ரஷ்யாவினால் லூனா - 20 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது.

1980: சூரியனில் பதினொரு ஆண்டுகால சுழற்சியில் ஏற்படும் கிளரொளி நிகழ்வுகளை ஆய்வு செய்வதற்காக "சோலார் மாக்ஸ்" என்ற செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

### சுனாமியால் முல்லைத்தீவு மாவட்டத்தில்

# பாதிக்கப்பட்ட பல்கலை மாணவருக்கு தமிழீழ மாணவர் அமைப்பு நிதியுதவி!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட 14 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழீழ மாணவர் அமைப்பினர் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தமிழீழ மாணவர் அமைப்பின் கணினிப் பயிற்சி நிலையத்தில் - மாணவர் அமைப்பைச் சேர்ந்த எழிலன்பன் தலைமையில் இடம்பெற்றது.

ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையும், உடுபுடவைப் பொதி ஒன்றும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் அறிவன்பன், முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செல்வம், அரச சார்பற்ற நிறுவன இணையத் தலைவர் சிவனடியான் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




# பூநகரி - சங்குப்பிட்டி வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை

பூநகரி - சங்குப்பிட்டி வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்த நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

பூநகரி - வாடியடி சந்திப் பகுதியில் இருந்து சுமார் 5 கிலோ மீற்றர் வரை நீளமான வீதி படுமோசமான நிலையில் சேதமடைந்துள்ளது. இந்த வீதியில் வாடியடிச்சந்தியில் இருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரததில் மதகு ஒன்று வீதிக்கு குறுக்கே சேதமடைந்து காணப்படுகிறது.

இந்த வீதியூடாக நெற்புலவு, பரமன்கிராய், வில்லடி, கௌதாரிமுனை, விளாசியோடை, கல்முனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெருஞ்சிரமங்களுக்கு மத்தியில் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை பூநகரி - கறுக்காய் தீவில் இருந்து தம்பிராய் சந்தி வரையான செட்டியகுறிச்சியில் இருந்து கம்பளி வைரவர் கோயில் வரையான வீதி, கறுக்காய் தீவில் இருந்து ஞானிமடம் வரையான வீதி, நாகதேவன்துறை வீதி, பூநகரி வாடியடியில் இருந்து தம்பிராய் சந்தி வரையான வீதி படுமோசமாகச் சேதமடைந்துள்ளன. இதனால் விபத்துககள் ஏற்படும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைக் கவனத்திற்கொணடு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பூநகரி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வவுனியா - பூம்புகார் பிரதேசத்தில் சுயதொழில் மேம்பாட்டுக் கடனுதவி

வவுனியா மாவட்டத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் சமூக, பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் வாழும் மக்கள் மத்தியில் கடனுதவி வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்து, முன்னெடுத்து வருகிறது.

அந்த வகையில் கடந்த புதன் கிழமை பூம்புகார் பிரதேசத்தில் 30 குடும்பங்களுக்கு நிக்கொட் திட்ட நிதி உதவியுடன் 3 லட்சம் ரூபா கடனை வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கடனுதவி, சுயதொழில் வாய்ப்பை இழந்து வாழும் குடும்பங்களுக்கு ஊக்குவிப்பாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# படுகொலைகள் தொடர்ந்து இடம்பெற்றால் போர்நிறுத்த உடன்பாடு செயலிழக்கும்!

## கண்டன அறிக்கையில் கிளிநொச்சி தேசிய எழுச்சி பேரவை

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு மற்றும் 4 போராளிகள், பொலநறுவை மாவட்டத்தில உள்ள வெலிக்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட கொடூரமான செயல்களைக் கண்டித்து, கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சமாதானத்துக்கான போர்நிறுத்த உடன்படிக்கை செய்து மூன்று ஆண்டுகள் நிறைவுபெறும் தருணத்தில் விலைமதிப்பற்ற எமது போராளிகளின் உயிர்களை நாம் அநியாயமாகச சிங்கள அரசின் கூலிப்படைகளினதும், சமூக விரோதிகளினதும் தாக்குதல்களில் பலிகொடுத்தே போர்நிறுத்த உடன்படிக்கையை காககவைத்து வருகிறோம்.

தொடர்ந்தும் எம்மால் இவ்வாறான படுகொலைகளை அனுமதிக்க முடியாது. எனவே இவ்வாறான படுகொலைகள் தொடர்ந்தும் இடம்பெறுமாயின் போர்நிறுத்த உடன்படிக்கையானது தூர்ந்து போகும் நிலை உண்டாகும் என்பதை நாம் மிகவும் ஆணித்தரமாக அரசுக்குக் கூறிவைக்க விரும்புவதுடன்-

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நடைபெறுமாயின் தமிழீழ மக்கள் எமது தேசியத் தலைவரின் கரங்களை மென்மேலும் பலப்படுத்தி, தனியரசு அமைப்பதைத் தவிர வேறுவழி தமிழர்களுக்கு இல்லை என்பதையும் நாம் இந்தச சந்தர்ப்பத்தில் சிங்கள பேரினவாதிகளுக்கும், அரசுக்கும் மீண்டும் ஒருதடவை ஊறுதியாகக் கூறி வைக்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொலைக்கல்வியை முடித்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ்

தொலைக்கல்விப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலக கல்வி வள நிலையத்தில் மாலை 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2001, 2002 ஆம் ஆண்டு பரீட்சையில் தோற்றி சித்தியெய்திய ஆசிரியர்களை இந்த நிகழ்வுக்கு தவறாது சமூகமளிக்குமாறு தொலைக்கல்வி மத்திய நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி நீ.இதயசிவதாஸ் கேட்டுள்ளார்.

# கிளிநொச்சியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரதேசத்தில் இடம்பெற்ற வீதி விபத்தில், படுகாயமடைந்த ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியால் கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 12.45 மணியளவில் கன்ரர் ரக வாகனமும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் - மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மாவடட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தின்போது பல்லவராயன்கட்டைச் சேர்ந்த விக்னேஸ்வரன் (வயது 31) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

## சங்கக் கிளைகள் மீண்டும் திறப்பு

பூநகரி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற வலம்புரி இராணுவ நடவடிக்கையில் பல கிளைகள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன.

இந்தக் கிளைகளில் புதிதாக அமைக்கப்பட்ட ஞானிமடம் கிளை, பள்ளிக்குடா கிளை என்பன அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

# உருக்குலைந்த நிலையில் இரு பெண்களின் சடலங்கள்!

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய இரு பெண்களின் சடலங்கள் தமிழீழ நீதிமன்ற நீதியாளரின் பணிப்பின் பேரில் புதைக்கப்பட்டன.

கடந்த வியாழனன்று முல்லைத்தீவு கோயில் குடியிருப்பு, புதுக்குடியிருபபு வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் அடையாளம் காண முடியாத நிலையில் இரு பெண்களின் சடலங்கள் கரையொதுங்கின.

கரையொதுங்கிய சடலங்கள் தொடாபாக அந்தப்பகுதி மீனவர்கள் தமிழீழ காவற்துறையினருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற முல்லைத்தீவு காவலபணிமனைப் பொறுப்பாளர் இ.றோய், புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் க.கிருபாகரன் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர்.

சம்பவ இடத்துக்கு நேரில சென்று சடலங்களைப் பார்வையிட்ட முல்லைத்தீவு மாவட்ட நீதியாளர் சடலங்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு உருக்குலைந்துள்ளதால், அவற்றைப் புதைக்குமாறு பணித்ததையடுத்து சடலங்கள் புதைக்கப்பட்டன.

சடலங்களிலிருந்து மீட்கப்பட்ட ஆடைகள் முல்லைத்தீவு காவல்துறை பணிமனையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் அவற்றைப் பார்வையிட்டு அடையாளம் காட்டுமாறு முல்லைத்தீவு காவல் பணிமனையின் பொறுப்பாளர் இ.றோய் காந் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஊழிபெயரினும் தாம் பெயரார் சான்றாண்மைக்கு*
*ஆழி எனப்படு வார்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஹர்த்தால் நிகழ்வுகள்; சில எச்சரிக்கைகள்!

வெலிகந்த படுகொலைச் சம்பவத்திற்கு எதிர்ப்பும் - கண்டனமும் தெரிவித்து, தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் நேற்று முன்தினம் விடுத்திருந்த ஹர்த்தாலுக்கான அழைப்புக் காரணமாக, குடாநாடு முற்றாக செயலிழக்கும் வகையில் மக்கள் அனைவரும் அதற்கு மதிப்பளித்துச் செயற்பட்டதன் மூலம், அரசுக்கு தமது எதிர்ப்புணர்வு மிக்க உள்ளக் கொதிப்பை வெளிப்படுத்தியதுடன் - சர்வதேச சமூகத்திற்கும் தமது மனக்குமுறலை இனங்காட்டிக் கொண்டனர்.

இன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பின், புரிந்துணர்வு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் எவ்வளவு சம்பவங்கள் நடந்துள்ளதுடன், ஒவ்வொரு சம்பவத்தின்போதும் மக்கள அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து தமது ஆட்சேபத்தையும், கண்டனத்தையும் - ஆர்ப்பாட்டப் பேரணிகள், ஹர்த்தால்கள், துக்கதினங்கள் உட்பட பல்வேறு வகையான அமைதிவழிப் போராட்டங்களை மேற்கொண்டு வெளிப்படுத்தியே வந்துள்ளனர்.

மக்களுக்கு தமது ஆற்றாமையையும், சினத்தையும், வெறுப்பையும் அரச பயங்கரவாதம் மற்றும் படைதரப்பினரினதும் அவர்களின் துணைப்படையான தமிழின விரோதக் குழுக்களினதும் அராஜகச் செயற்பாடுகளுக்கும் எதிராக தெரிவிப்பதற்கு இதனைவிடவும் மாற்று அமைதிவழிகள் இல்லையென்பதும் உண்மையே.

அரசும் படைத்தரப்பினரும் அதிகாரத்தை மட்டும் பயன்படுத்தி தமிழ் மக்களின் மனிதஉரிமைகளைப் புறந்தள்ளிவிட்டு, தமது மேலாதிக்க வல்லமையைப் பிரயோகித்து, அடக்குமுறைகளை பிரயோகிக்கும் போதெல்லாம் இன்றைய சமாதான சூழலை மனதிற்கொண்டு அதற்கு மதிப்பளிக்கும் வகையில் பொறுமைகாக்க முயலும் அதேசமயம் - இத்தகைய அரசியல் மற்றும் ஆயுதமுனைகளினாலான ஒடுக்குமுறையையும் அதற்கெதிரான தமது ஆக்ரோஷமான போராட்ட உணர்வையும் வெளிப்படுத்தும் நோக்குடன் நடத்தும் இத்தகைய ஹர்த்தால் போன்ற நடவடிக்கைகள் அவர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளே ஆகும்.

இத்தகைய ஜனநாயக உரிமைகளையும் ஆயுத ரீதியில் அச்சுறத்தி, மிரட்டி மறுக்க முயல்வது சர்வாதிகாரத்தின் மிக மோசமான ஒரு வெளிப்பாடேயாகும்.

அநீதிக்கும், கொடுமைகளுக்கும், மேலாதிக்க சர்வாதிகார ஆட்சியாளருக்கும் எதிராகப் போராடும் ஜனநாயக உரிமைகள் சகலமக்களினதும் ஜனநாயக உடமையாகும்.

இதனை மறுப்பதும், இதற்கு எதிராக சட்டங்களைப் பிரயோகிப்பதும், மக்களை நோக்கி ஆயுதங்களை குறிவைத்து நீட்டுவதும், அரச பயங்கரவாதத்தின் உச்சக்கட்ட அடக்குமுறை மூலோபாயங்களாகும். இத்தகைய மூலோபாயங்கள் - அவலமும், ஆபத்தும் நிறைந்த பின்விளைவுகளையே முழு நாட்டுக்கும் ஏற்படுத்தும் என்பது வரலாறு கடந்த காலங்களின் நிகழ்வுகள் மூலம் தீர்க்கமாக உணர்த்தியுள்ள பாடமாகும்.

ஆனால், அரசோ - அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள படைத்தரப்பினரோ இத்தகைய பட்டறிவு அனுபவங்கள் மூலம் பாடமெதனையும் கற்றுக் கொண்டதாக இல்லை என்பதையே நேற்று முன்தினம் நடைபெற்ற ஹர்த்தாலின் போது, தென்மராட்சிப் பகுதியிலும், வேறு குடாநாட்டின் சில பகுதிகளிலும் நடைபெற்ற சில சம்பவங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

புத்தூர் மற்றும் கைதடி போன்ற இடங்களில் ஹர்த்தால் நடவடிக்கைகளில் நிராயுதபாணிகளாகக் கலந்துகொண்டு, அமைதியாக தமது ஜனநாயக ரீதியிலான எதிர்ப்புணர்வை வெளியிட்ட அப்பாவி மக்களை நோக்கி ஆயுதங்களால் இலக்குவைத்து அச்சுறுத்தி கலைக்க ஆயுதப் படையினரும், பொலிஸாரும் முயன்றபோது - மக்களுக்கும் அவர்களுக்குமிடையே ஏற்பட்ட முறுகல் நிலையால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை, இலங்கையில ஜனநாயகமும், மக்களின் அடிப்படை உரிமைகளும் எத்தகைய அச்சுறுத்தல்களுக்குள்ளாகி இருக்கிறது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துபவையாகவே உள்ளன.


மக்களின் உணர்வை - அநீதிக்கு எதிரான அவர்களின் குரலை - அடக்க முற்படும் போது என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை கடந்த மாதங்களில் நடைபெற்ற இதேபோன்ற சம்பவங்கள் மூலம் நன்றாக உணர்ந்திருக்கும் படைத்தரப்பினர், தொடர்ந்தும் ஆயுதமுனையில் மக்களைச் சீண்ட முனைவது வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தி, சமாதானச் சூழலுக்கு ஆபத்தை உருவாக்க முனையும் உள்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்றே கருத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

- இத்தகைய குறுகிய நோக்கங்களுடன் கூடிய படைத்தரப்பு நடவடிக்கைகள் அவர்களால் சுயாதீனமாக மேற்கொள்ளப்படுபவை என நம்பமுடியாது. அரசினது அல்லது அதன் ஏதோ ஒரு குறுமதிகொண்ட பிரிவினரது பின் உந்துதலின்றி இவை நடைபெற முடியாது.

- எனவே இது தொடர்பாக அரசுக்கு எதிராக மக்கள் ஆக்ரோஷம் கொள்வதும் தவிர்க்கவோ - தடுக்கவோ முடியாத விடயமாகும்.

- இத்தகைய நிகழ்வுகள் தொடர அரசு படைத்தரப்புக்கு ஆசீர்வாதம் வழங்குமாயின், மீண்டும் இந்த நாட்டில் வரலாற்றை அது இரத்தத்தால் எழுதவிரும்புகிறது என்றே அர்த்தமாகும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# காலம் மாறும்வரையா காலத்தை மாற்றும் வரையா பொறுத்திருப்பது?

கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்.... என்று சொல்லிக்கொண்டே வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

இன்னும் எத்தனை காலத்துக்குப் பொறுத்திருப்போம், பொறுத்திருப்போம் காலம் மாறும் என்று சொல்லிக்கொண்டிருக்கப் போறியள் என்றேன்.

நீர் அவசரப்படுகிறீர்! நான் சொல்லவந்ததும் இன்னும் எத்தனை காலத்துக்குக் கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும் என்று தமிழ் மக்கள் காத்திருக்கப்போகிறார்கள் என்பதைத்தான் என்றார் பரமசிவம்.

கௌசல்யனோடு தாக்குதலுக்குள்ளாகி மரணமடைந்த அரியநாயகம் சந்திரநேருவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நின்ற தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனுக்கு ஹெலி கொப்ரர் வசதியளிப்பதாகச் சொன்னவர்கள் இறுதி நேரத்தில் கையை விரித்துவிட்டனரே என்ன காரணம் என்றேன்.

இதற்கு என்ன காரணம் சொல்கிறார்களோ தெரியவில்லை. தமிழ்ச்செல்வன் குழுவினரும் தரைவழியாகப் போய்ப் பார்க்கட்டும் நாம் வேறு வழிபார்க்கலாமென்று கருதினார்களோ தெரியவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளுக்கு ஹெலி வசதி செய்து கொடுப்பதை படைத்தரப்பு விரும்பவில்லையென்ற மாதிரி இனவெறி ஏடான திஜலன்டும் அதன் சகோதர சிங்கள ஏடுகளும் செய்திகள் வெளியிட்டிருந்ததைக் கவனிக்கவில்லையா? என்றார் பரமசிவம்.

அதிலென்ன ஆச்சரியமிருக்கிறது. இது அவர்களின் வழமையான துவேஷப் பிரசாரங்களில் ஒன்றுதானே என்றேன்.

கௌசல்யன் கொலையைக் கண்டித்துக் கருத்துத் தெரிவித்து ஐ.நா.செயலர் கொபி அனான் அறிக்கை விடுத்ததைக் கண்டித்து ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள இயக்கம், ஜே.வி.பி.போன்றவை குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்றன பார்த்தீரா என்றார் பரமசிவம்.

ஏன் இப்போது, அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் கௌசல்யன் கொலைசெய்யப்பட்டது சமாதான முயற்சியில் நஞ்சு கலந்த செயல் என்று ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷியும் கூடக் கண்டித்திருக்கிறாரே. இதற்கு இவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள்? என்றேன்.

தங்கள் சொந்த மண்ணில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு ஆயுதங்கள் எதுவுமில்லாமல் சென்று கொண்டிருந்தவர்களைக் கபடத்தனமாக ஒளித்திருந்து தாக்கிக் கொலை செய்திருக்கிறது ஒரு கும்பல். இந்தக் கொலையைக் கண்டிக்காமல் வாழ்த்தவேண்டுமென்று விரும்புகிறார்களா? என்றார் பரமசிவம்.

இதுபோன்ற நயவஞ்சகக் கொலைகளைக் கண்டிப்பதையோ இப்படிக் கொலையுண்டவர்களுக்காக அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவிப்பதையும்கூட படைத்தரப்பும் அரசதரப்பும் விரும்புவதில்லை. என்ன நடந்தாலும் அரசின் செயல்களையும் படைத்தரப்பின் செயல்களையும் மக்கள் கண்மூடி வாய்மூடி மௌனிகளாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் போலும்! என்றேன்.

அப்படியல்ல தமிழ் மக்கள் அடங்கி ஒடுங்கி அஞ்சிவாழ வேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். ஆனால் மக்கள் பொறுமையை இழந்துவருகிறார்கள். இன்னும் எத்தனை காலத்துக்கு அவர்கள் பொறுமையுடன் இருப்பார்கள் என்று சொல்லமுடியாது. உலக நாடுகளுக்கும் இது தெரிகிறது. இதனால்தான் பாகிஸ்தானில் போய், கடல்கோள் அனர்த்த நிவாரண உதவிகள் தென்னிலங்கையை விட வடக்கு-கிழக்கு இலங்கைக்கே அதிகமாக வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார் சந்திரிகா அம்மையார் என்றார் பரமசிவம்.

அவசரகாலநிலை மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது. கௌசல்யன் கொலையும் அவசரகால நிலையில்தான் நடந்திருக்கிறது. இந்தக் கொலையை எதிர்த்துத் தமிழ் மக்கள் பொங்கி எழுந்தால் அதை அடக்கி ஒடுக்குவதற்கு புலிப் பயங்கரவாதத்தைச் சொல்லிப் பூச்சாண்டி காட்டலாமென அரசு நினைக்கிறது. கௌசல்யன் கொலையை வைத்து போரை மீண்டும் தொடங்குவதற்கான ஒரு முயற்சி என்று வன்னி. மாவட்ட எம்.பி.செல்வம் அடைக்கலநாதன் நாடாளுமன்றத்திலேயே சொல்லியிருக்கிறார். புலிகள் பொறுமை காப்பதை அரசாங்கம், அவர்கள் பலவீனமாகி விட்டனர் எனக்கருதக்கூடாது. போரா? சமாதானமா? என்பதை அரசுதான் தீர்மானிக்கவேண்டும். இனிமேல் போர் ஏற்பட்டால் புலிகள் மட்டும் போராட மாட்டார்கள். முழுத்தமிழ் சமூகமுமே ஆயுதம் ஏந்தும் என்றும் அடைக்கலநாதன் எச்சரித்திருக்கிறாரே கவனித்தீரா என்றேன்.

அவர் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறார். ஆனால், தமிழ் மக்களுக்கு இன்னமும் வழிகாட்டுவதாக நினைத்துக்கொண்டு அறிக்கைவிடும் தலைவர்கள் சிலர்தான் மக்களையும் நாட்டின் நிலைமையையும் புரியாமல் தடுமாறிக்கொண்டு குழும்பித் திரிகிறார்கள். அவர்கள் தாங்களே குழம்பியும் திரிகின்றனர். உயர்பாதுகாப்பு வலயம் என்று மக்களின் இருப்பிடங்களை இராணுவம் ஆக்கிரமித்திருக்கிறது. மக்கள் தங்கள் சொந்த மண்ணில் சுதந்திரமாக நடமாடித்திரியமுடியவில்லை. இவை போதாதென்று சுனாமிப் பேரழிவினால் சகலவற்றையும் இழந்து அநாதைகளாக அகதிகளாகிப்போன மக்களுக்கு புனர்வாழ்வளிக்கவும், அவர்களின் இடங்களைப் புனரமைக்கவும் உலகநாடுகள் அள்ளி அள்ளிக் கொடுத்தாலும், அவை மக்களுக்கு ஒழுங்கான முறையில் போய்ச்சேர அரசு வழிவகுப்பதாகக் காணோம். சுனாமிக்குப் பின் இனக்குரோதத்தை மறந்து சகல மக்களையும் ஒரே விதமாகப் பார்க்கும் பக்குவம் ஆதிக்க சக்திகளிடம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அது நிறைவேறவில்லை. கொலையுண்டவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதிலும் இரங்கல் தெரிவிப்பதிலும்கூட சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் பாகுபாடு காட்டுகிறார்களென்றால், வேறு எதில் அவர்கள் விட்டுவைக்கப்போகிறார்கள்? இன்னும் சிலர் சிங்கள அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் நடக்கிற போராட்டம் என்பது போல நடந்துகொள்வதும், குறை குற்றங்களை அம்பலத்தில் அலசி, சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு தீனி கொடுப்பதுபோல் அறிக்கை விடுவதும், தமிழ் மக்களுக்கு இவர்கள் செய்யும் மகாமோசமான துரோகம் என்பதை ஏன் இவர்கள் இன்னமும் அறியாமலிருக்கிறார்கள். 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்றொரு பழமொழி இருக்கிறது. தமிழீழம் என்ற தமிழர் தாயகம் அமைந்தால்தான் நாம் தமிழர் என்ற பெருமையோடு உலகில் மற்ற நாடுகளுக்கு ஈடாக வாழமுடியும். தமிழீழத்தில் பெரும்பகுதியை வென்றுவிட்டோம். எஞ்சிய பகுதியையும் நாம் ஒற்றுமைப்பட்டால் நிச்சயம் வென்றுவிடமுடியும். பங்களாதேஸ் இன்று தனி நாடாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது. ஏன் எம்மாலும் தமிழீழத்தை வென்றடைய முடியாது. எம்மவரில் சிலர் ஜனநாயகம் பற்றியும் ஒருமைப்பாடு பற்றியும் பேசுகிறார்கள். ஜனநாயக வழியிலும் சாத்வீக முறையிலும் தானே கடந்த பல்லாண்டுகளாகப் போராடினோம். ஜனநாயகமென்றால் இலங்கையில் பெரும்பான்மை ஜனநாயகத்தைத்தான் எடுத்துக்காட்டியது. சாத்வீகப் போராட்டம் இலங்கையில் தமிழின அழிப்புக்குத்தானே வழிவகுத்தது. ஜனநாயகத்தையும் சாத்வீகப் போராட்டத்தையும் மட்டுமே நாம் தொடர்ந்தும் நம்பி வாழ்ந்திருந்தோமானால், தமிழ் இனமே இன்று இலங்கையில் இல்லாது ஒழிந்துபோயிருக்கும். இதனால்தான் நாம் இன்னும் கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம்மாறும் என்று காத்திராமல் காலத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்கிறேன். இப்படி ஒரு குட்டிப் பிரசங்கமே நிகழ்த்திவிட்டு வீறிட்டெழுந்து சென்றார் பரமசிவம்.

## காதலர்களுக்கு

உங்களுக்கு
உங்களின் காதல்
உன்னதமானதாகத்தான் இருக்கும்
காதலை விமர்சிப்பதால்
கடுங்கோபமும்
உங்களுக்கு வரலாம்
அதற்காக
காதலின் கனதியை
சொல்லாமல் விடமுடியுமா?




எத்தனை காதல்கள்
எல்லைக்கோட்டை தொட்டிருக்கின்றன
எல்லைக் கோட்டை தொட்டபின்னும்
எத்தனை காதல்கள்
எழிலாக வாழ்கின்றன
எதிர்பார்ப்புகளோடு
மத்தாப்பாய் விரியும் காதல்
ஒளிதந்த வேகத்திலேயே
அணைந்துவிடுவதுமுண்டு
கண்டதும்
துளிர்க்கும் காதலின்
கனதிதான் என்ன?



காதலின்
எச்சங்களாய்
கறுத்த தாடிகளையும்
களையிழந்த முகங்களையும்
பைத்திய பவனிகளையும்
கயிற்றில் தொங்கிய கோழைகளையும்
காணமுடிகிறது.

குளத்தில் கல்லெறிந்து
குழப்புகின்ற
காதலில் தோற்றவரின்
கனதியற்ற வரிகளென
எண்ணி விடாதீர்கள்
உன்னதமாய்
காதலை மீட்டியபடி
இல்லறத்தில் இயங்கும்
இதயத்தின் வரிகளிவை



உண்மைக்காதல்
ஒருபோதும்
ஊமையாகிப் போகாது
வெண்மைக் காதல்
ஒரு போதும்
வெளிச்சம் வற்றி அணையாது
தண்மைக் காதல்
ஒருபோதும்
தவறாகி வீழாது
கறுப்பு வெள்ளை
நிறங்கள்
காதலுக்கு பிடிக்காது
காத்திரமற்ற மனங்கள்
கடைசிவரை நிலைக்காது



உண்மை
வெண்மை தண்மை
உயிரில் கலந்து எழுதுங்கள்
திண்மை கொண்ட மனதில்
புரிந்துணர்வுப் பூச் சூடுங்கள் .

**வைகை**
(யாழ்.பல்கலைக்கழகம்)

---

காதலர் தினத்தை முன்னிட்டு... எஸ்.எல்.எம் குத்தூஸ்

# காலத்தால் அழியாதது காதல்

ஒவ்வொரு வருடமும் உலகெல்லாம் பெப்ரவரி 14 ஆம் திகதியை காதலர் தினமாகக் கொண்டாடுகிறார்கள். முதலில் காதல் என்றால் என்ன? என்பதைப் பார்ப்போம். காதல் என்ற சொல்லுக்கு அன்பு, பாசம், கருணை, நேசம் எனப் பல்வேறு பொருள்களை எடுத்துக் கொள்ளலாம். இங்கு ஒரு ஆணுக்கும் பெண்ணுக் கும் ஏற்படும் அன்பை காதல் என்கிறோம். இந்தக் காதல் எப்போது தோன்றும்? யார் யாருக்குத் தோன்றும்? எப்படித் தோன்றும் என்பதை யாராலும் சொல்ல முடியாது.

கண்ணோடு நண்பனாகி
இதயத்தோடு கள்வனாகி
உயிரிலே கைதியாகி
உணர்விலே சிறையிருப்பது தான்
காதல்.


என்று கவிஞர் ஒருவர் கூறியுள்ளார். எல்லோரும் காதல் புனிதமானது, காதல் தெய்வீகமானது, காதல் அழியாதது என்றெல்லாம் கூறுகிறார்கள். அப்படி என்றால் காதல் என்ற சொல்லுக்குப் பொருள் என்ன? இரண்டு பருவமடைந்த இளசுகள் தமக்குள்ளே நட்புக் கொண்டு உரசிக் கொள்வது காதலா? அல்லது உணர்ச்சிகளைத் தாண்டி உள்ளத்தில் தனி இடம் கொடுத்து தனிமைப்படுத்துவதுதான் காதலா? ஆக காதல்என்றால் என்ன? சைக்கிளில் போவது காதலா? ஐஸ்கிறீம் சாப்பிடுவது காதலா? சினிமாவுக்குப் போவது காதலா? பீச்சுக்குப் போவது காதலா?அல்ல...

காதல் என்பது ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு எந்தச் சந்தர்ப்பத்திலும் வேற்றுமை வராது, சந்தேகங்களைக் கழற்றி வீசி விட்டு சந்தோஷமாய் காலமெல்லாம் இருப்பதுதான் காதல். உலகில் எல்லோரும் எப்படியோ, எந்தச் சந்தர்ப்பத்திலோ காதலித்திருப்பார்கள், காதலிக்கிறார்கள் அல்லது காதலிப்பார்கள்.

காதல் என்ற வார்த்தைக்கு ஒரு கோணம் தான் அன்பு. அது மனிதனின் பிரமாண்டமானத்தால் உருவான மானுட ஆற்றல். இது வார்த்தைகளுக்கும் ,மௌனத்துக்கும் அப்பால் பாயும் உள்ளொளி. அன்பின் சங்கீதம் என்றும் எப்போதும், எங்கும் இரண்டு உள்ளங்களுக்கிடையே ஒளி பரப்பும் உன்னதமான தெய்வீக சக்தியே காதல் ஆகும்.

காதல் என்பதைப் பற்றி மேலும் ஒரு கவிஞன் சொல்லும் போது –

'உலகின் தோற்றம்
உயிரின் வாசம் –இது
அன்பின் அரங்கேற்றம்



இன்பப் பரிமாற்றம்
வசந்தப் பூவாசம்
உணர்வின் சங்கமம்
உள்ளத்தில் தங்கிடும்
உறுதியான நட்பு'

இவ்வாறு எழுதியுள்ளார். எந்த வரலாற்றுக் கவிஞர்களைக் கூட எடுத்துப்பாருங்கள். காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை. காதலைப்பாடாதவன் கவிஞனுமில்லை. மனிதனை மனிதனாக மாற்றவும், மனிதனை மிருகமாக மாற்றவும் சக்தி வாய்ந்த ஒன்றாக இந்தக் காதல் காணப்படுகிறது. ஏழை, பணக் காரன், சாதி ,மத, பேதம், உயர்வு, தாழ்வு என்ற அத்தனை தடைகளையும் உடைக்கும் சக்தி காதலுக்கு மாத்திரம் தான் காணப்படுகிறது.

காதல் இன்று தொட்டு வந்ததல்ல. ஆதி காலம்தொட்டே பரவிவிட்டது. அதாவது – இராமாயணத்திலே கதாநாயகனும் , கதாநாயகியும் ஓர விளிப்பார்வையிலே உள்ளதெல்லாம் சொல்லி விட்டு, காதல் செய்து கொண்டார்கள். காட்டுக்குச் சென்றார்கள், பிரிந்தார்கள். இடையில் பாரிய போராட்டம் . பின்னர் சேர்ந்தார் கள். மறுடியும் மனக் கசப்புக்கு ஆளாகி இறுதியில் கதாநாயகி மண்ணுக்குள் மறைந்தே போனாள். இதே போன்று நளவெண்பாவில் – நளனும் தயமந்தியும் காதலித்து இன்னல்பட்டகதையும், மாதவியும் கோவலனும் அடைந்த பிரச்சினையும் அம்பிகாபதி அமராவதி என்ற இரு காதல் புறாக்கள் சிறகு வெட்டப்பட்ட கொடுமையும் , லைலாவின் முகத் தரிசனம் கூடக் கிடைக்காமல் அவள் சமாதியில் மோதிக்கதறிய மஜ்னுவின் வேதனையும் ,மூடிய இரும்புக் கதவுக்கு ஆளாகி இருபுறங்களில் உயிர் விட்ட தேவதாஸ் பார்வதியும் எவராலும் மறக்க முடியாத காதல் பாத்திரங்களாகும்.

காதலை காதலுக்காக காதலித்தவர்கள் இந்த உலகை விட்டு மறைந்து போய் முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. எனினும் அவர்களுடைய பெயர் இன்னும் அழியாத காவியமாய் எல்லோரின் மனங்களிலும் கொடிகட்டிப் பறக்கிறது. அவர்களில் சிலரைப் பார்ப்போம்...

**லைலா – மஜ்னு**

லைலா இறந்து போனாள் என்ற செய்தியைக் கேள்வியுற்ரு மூச்சை அடக்கி தரையில் வீழ்ந்தான். உயிருடன் இருந்த போது ஒன்று சேர்க்க முடியாத மக்கள் – அவர்கள் உயிர்த் தியாகம் புரிந்த பின்னர் ஒன்று சேர்க்க முனைந்தது ஏனோ...ஆனால் அவர்கள் இருவரையும் ஒரே கல்லறையில் வைத்தே அடக்கம் செய்தார்கள்.

**ஷாஜஹான் – மும்தாஜ்**

காதலித்து திருமணம் முடித்து, பின்னர் தனது அன்பு மனைவி இறந்த பின்னர் அவள் கூறிய வார்த்தைகளுக்காக ஷாஜகானால் கட்டப்பட்ட அதிசய மாளிகைதான் தாஜ்மஹால் ஆகும். இது காலத்தால் அழிக்க முடியாத ஒப்பற்ற நினைவுச் சின்னமாக விளங்குகிறது.

**அம்பிகாவதி – அமராவதி**

என் ஆருயிர் காதலரே நீர் சென்ற சொர்க்கத்துக்கு நானும் வருகிறேன். என்னையும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று, உணர்ச்சி பொங்கக் கூறியவாறு அம்பிகாவதியின் உடலின் மேல்துவண்டு விழுந்தான். காதலர் இருவரும் விண் வழியே இன்ப உலகை எய்தினர். இவர்கள் காதல் இலக்கியத்தில் அழிக்கமுடியாத இடத்தைப் பெற்றனர். அது மட்டுமா? தேவதாஸ் பார்வதி காதல். இவ்வாறே பட்டியல் இட்டேசெல்லலாம்.

காதல் ஒன்றும் கெட்ட வார்த்தையோ, கெட்ட செயல்களோ அல்ல. இவற்றைப் புரிந்து கொள்ளாத சில மனிதர்களே அவற்றைத் தவறுதலாகக் கருதுகிறார்கள். மனிதனுக்கு இதயம் ஒன்று இருந்தால் காதல் இருந்தே தீரும் என்று சான்றோர் கூறியுள்ளார்கள். இளைஞர்களே காதலிக்கும்போது யாரையும் உருத்தாத , எவருக்கும் தொல்லை கொடுக்காத தன்மானத்துக்கு இழுக்கு ஏற்படாத வகையில் இதயத்துக்கு இதம் சேர்க்கின்ற வகையில் இனிமையாகக் காதல் செய்யுங்கள்.

இந்த பெப்ரவரி 14 ஆம் நாள் –

காதல் வயப்பட்டு வாழ்வையேற்ற இருவருக்காக மட்டுமல்ல, அன்பின் தேசத்தின் அக்கறையின் பாசத்தின் வெளிப்பாடுகளாய் மலர்ந்துள்ள அனைத்துக்கும் பொதுவான புனித நாள் ஆகும்.

---

பகுதி – 38 சங்கர்



# காற்றே நீ எம் கதை கேளாயோ... அலையே நீ எம் நிலை உரையாயோ...

உருப்படியான கடைகளோ, வியாபாரம் தொடர்பான ஆர்வமோ இல்லை.

வயல் வேலை, கடற்தொழில் இரண்டுமே பிரதானமாக இருப்பதால், கல்வி தொடர்பான விடயங்களில் குழந்தைகளை ஈடுபடவைக்கும் ஆர்வம் பெற்றோரிடம் மிகவும் குறைவு. இது சமூகக் கடடமைப்பிலும், பெரும் குழறுபடிகளை உண்டாக்குகிறது. எனவே எமது பிரதான பணி மீள் குடியேற்றத்துடன் கல்வி தொடர்பான விடயங்களில் மக்களை ஊககுவிப்பதாக இருக்கவேண்டும். இதற்கென எமது இயக்கத்தின் கட்டமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு இன்னும் கூடிய கவனத்தை இந்தப் பகுதி மீது திருப்பச் சொல்லி உள்ளேன்.

அறிவு - என்னை வாகரைப் பகுதியைச் சுற்றிப் பார்க்க ஒரு போராளியுடன் அனுப்பி வைத்தார். அன்றைய தினம் தான் மட்டக்களப்பில் இருந்து (பெப்ரவரி 8) வாகரைக்கு பஸ் சேவை ஆரம்பமானது. டிசம்பர் 26 ஆம் திகதி முதல் பெப்ரவரி 8ஆம் திகதி வரை ஒன்றரை மாதங்கள் பனிச்சங்கேணியில் அனைத்துப் போக்கு வரத்தும் படகு மூலமே நடைபெற வேண்டியிருந்தது. நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புக்கு கொண்டு சென்றாலும் சரி, நிவாரணப் பொருட்கள் கொண்டு வருவதானாலும் சரி படகைத் தான் பயன்படுத்த வேண்டியிருந்தது.

ஒரு சோபிக்கப்பட்ட பிரதேசம் போல வெளியுலகத் தொடர்புகள் குறைந்த இடமாக இருந்தது. ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதனால் ஒரு நாளில் இந்தப் பாலத்தைப் போட்டிருப்பர்கள். அதற்கான உதாரணங்கள் பல உண்டு. நாவற்குழி பாலமே இதற்குச் சான்று.

மேலும் தொலைக்காட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளித் தொடர்புகளை ஏற்படுத்த, அவரச அவசரமாக தொலைத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்த காட்சிகளைக் கண்டுள்ளோம். இதெல்லாம் தென்னிலங்கைக்கு மட்டும் தான். தமிழ் பேசும் பிரதேசங்களுக்கு அல்ல.

தேவாலயங்கள், ஆலயங்கள் குடியிருப்புக்கள் அனைத்துமே அழிந்து போயிருப்பதைக் காணமுடிந்தது. வீதியில் கடற்கரைக்கு எதிர்ப்புறமாக அமைந்திருந்த வாகரை வைத்தியசாலையும் கணிசமான சேதத்தைக் கண்டிருந்தது. இது இன்னமும் திறக்கப்படவில்லை. காவல்துறைப் பணிமனை தரைமட்டமாகியிருந்து. மாவீர துயிலும் இல்லமும் தப்பவில்லை. கல்லறைகள் சில பெயர்ந்து கிடந்தன. வீதியில் கடற்கரைப் பக்கமாக இருந்த துயிலுமில்ல சுவரின் பாகங்கள் வீதிக்கு எதிர்ப்புறமாக சுமார் 50 மீற்றர் தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்டிருந்தது. (தொடரும்...)

---

# தவக்கால நற்சிந்தனை

மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுடன் ஒருவருக்கு நீங்கள் செய்வதையெல்லாம் எனக்கே செய்தீர்கள். (மத்.25:40)



= மோ.தார்சீசியஸ் =

உலகம் ஒரு நாடகமேடை. அதில் நாமெல்லாம் ஒரு கதாபாத்திரங்கள் என்று நம்முன்னோர் சொல்வதை கேட்டிருக்கிறோம். ஆனால் நாம் மறு உலகம் செல்வதற்காக நம்மைத் தயார்படுத்தும் ஒரு கல்விக் கூடம் தான் இவ்வுலகம் என்பதை நம்மில் எத்தனை பேர் உணர்ந் திருக்கிறோம்? இந்தக் கல்விக் கூடத்தில் நாம் படிக்க வேண்டிய பாடப்புத்தகம் திருவிவிலியம் என்பதையும், அதை நமக்கு பயிற்றுவித்து வழிநடத்துபவர் பரிசுத்த ஆவியானவர் தான் என்பதையும் நம்மில் எத்தனை பேர் உணர்ந்து அனுபவித்திருக்கிறோம்? அதிலே யேசுவுடைய வாழ்வு தரும் வார்த்தையும், நம்முடைய இவ்வுலக வாழ்க்கை பற்றியுமே நிறைவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏழைக்கு இரங்குவது, உதவிசெய் வது என்ற அவரது செயலும், போதனைகளும் ஒடுக்கப்பட்டோர் உரிமை மறுக்கப்பட்டோர்களை தேடிச் சென்று உதவிசெய்ததைப் போல நம்மையும் செய்யுமாறு பணிக்கிறார். பெறுவதைவிட கொடுப்பதேமேல் என்ற வாக்கை நினைத்து வாழ்வோம்.

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால்**

யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான பிறிமா கிறீன் மா கேள்வி கோரல்
ஜனவரி, பெப்ரவரி, மார்ச் - 2005

1) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு மாதமொன்றுக்கு 1000 Mt படி 3000 Mt பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காகக் கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| விநியோகிக்கவேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஜனவரி | 1000 Mt |
| 2005 பெப்ரவரி | 1000 Mt |
| 2005 மார்ச் | 1000 Mt |

கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.02.14 ஆம் திகதி தொடக்கம் 2005.02.25 ஆம் திகதிவரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியைச் சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bon) மெற்றிக்தொன் ஒன்றுக்கு (01Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.02.28 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப 2.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

4) நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயற்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் தை மாதத்திற்கு 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர்/அரச அதிபர்
மாவட்ட கேள்விச்சபை/
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

c/3821

# ஆசிரியர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம்!

**யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியில் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த ஆசிரிய நியமனம் குறித்த நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.**

## கணிதம்

நாகரட்ணம் தினேஷ் (யாழ்ப்பாணம்), நடராஜா சுதாகர் (தும்பளை மேற்கு), சுஜித்தா ஸ்கந்தராஜா (வட்டுக்கோட்டை), செல்வரஞ்சினி இளஞ்சிங்கம் (புலோலி), அபிராமி இராமநாதன் (கொக்குவில்), சிவாஜினி கனகரட்ணம் (உடுப்பிட்டி), சிவபுத்திரன் ஜெகதீபன் (வதிரி), சோமசுந்தரம் கிருஷ்ணன் (மானிப்பாய்), சிதம்பரநாதன் அகிலன் (கொடிகாமம்), சிவபாதசுந்தரம்பிள்ளை நவனீதன் (பருத்தித்துறை),

சமதர்மபாலன் சஜிவ் (அல்வாய்), சண்முகதாஸ் வாகீஸ்வரன் (திருநெல்வேலி வடக்கு), போஜன் உல்லாசனன் (மானிப்பாய்), குணம் சசிதரன் (மீசாலை), தர்சினி தியாகராஜா (மல்லாகம்), ஜெயதர்சி திருநாவுக்கரசு (மட்டுவில் வடக்கு), அம்பாலிகை சுவாமிநாதபிள்ளை (அளவெட்டி), மகாலிங்கம் யதுஷன் (நீர்வேலி), தவராஜா பிரசாந்தன் (வட்டுக்கோட்டை), மரியதாஸ் தோமஸ் அசுபதிராஜ் (வவுனியா),

குமாரசாமி உமாகரன் (கொக்குவில்), தம்பிராஜா யோகேஸ் (மல்லாவி), வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் (மாதகல்), சின்னத்துரை சிவகாந்தன் (சாவகச்சேரி), கமலநாதன் செந்தில்குமரன் (கரவெட்டி), தங்கராஜா ரவிதாஸ் (ஏழாலை), இரத்தினசிங்கம் சூரியகுமார் (செட்டிப்பாளையம்), வரதராஜன் பாலமுரளி (கொக்குவில்),

## விஞ்ஞானம்

பரமசிவம் சிவசுதன் (மீசாலை), பத்மலோஜினி பத்மநாதன் (உஷன்), கார்த்திகா சாம்பசிவம் (கொழும்புத்துறை), தியாகசொரூபி வல்லிபுரம் (காரைநகர்), ராஜலோசனா ஓரானந்தசிவம் (நீர்வேலி), தர்மிலா சிவரா[illegible] (கரவெட்டி), ராதிகா ரத்தினம் (நீர்வேலி), தயாராணி சிவப்பிரகாசம் (முள்ளியவளை), குயிலினி சிறிகாந்தா (கரணவாய் கிழக்கு), நாகநந்தினி முத்தையா (அராலி மத்தி),

வாசுகி இராசதுரை (சுன்னாகம்), செந்தில்நாதன் சனாந்தன் (அளவெட்டி), இரத்தினம் சிவானந்தி (கிளிநொச்சி), பரமானந்தராஜா பார்த்தீபன் (சண்டிலிப்பாய்), தனரஞ்சிதானந்தன் நித்தியா (யாழ்ப்பாணம்), தற்பரா தெய்வேந்திரம் (அச்சுவேலி), சுகந்தி வேலும்மயிலும் (புலோலி மேற்கு), தியாகராஜா தர்மினி (பருத்தித்துறை), யாழினி இராஜகோபால் (புலோலி மேற்கு), தேன்மொழி இராஜேந்திரம் (ஏழாலை), சுரேஜினி பரம்சோதி (கோண்டாவில்), மதிவதனி நாகமுத்து (புத்தூர்), சின்னராஜா சசிகரன் (துணுக்காய்),

## சங்கீதம்

சிவஞானம் ஞானரஞ்சன் (வல்வெட்டித்துறை), தனுஜா ஆறுமுகம் (அச்சுவேலி), அருள்மொழி சிவகுரு (கரவெட்டி), கமலலோஜினி நவரட்ணராஜா (கொடிகாமம்), அம்பிகா நடராஜலிங்கம் (புலோலி), ரஜினி ராஜநாயகம் (நவிண்டில்), சின்னையா கேதீஸ்வரி (அளம்பில்),

## ஆரம்பக்கல்வி

சகுந்தலா சபாபதிப்பிள்ளை (வட்டுக்கோட்டை), தர்மினி வேலாயுதபிள்ளை (சாவகச்சேரி), கந்தசாமி ஹம்சன் (ஆனைக்கோட்டை), ஜோசப் ஜஸ்ரின் பேணாட் மரியசெல்வம் (மானிப்பாய்), பெனடிக் இராஜநாயகம் அகிலநாயகம் (நாவாந்துறை), ஜெயரட்ணசிங்கம் ஜெயஜீவன் (அளவெட்டி வடக்கு), ஜீவரேகா வரதராஜலிங்கம் (மானிப்பாய்), ராதிகா கனகநாயகம் (மானிப்பாய்), காஞ்சனா கந்தசாமி (தெல்லிப்பளை), விஜிகலா தர்மராஜா (மானிப்பாய்),

விஜிதா திருநாவுக்கரசு (அச்சுவேலி), யசோதினி நாகரத்தினம் (நல்லூர்), வனஜா சிவராஜா (பண்டத்தரிப்பு), உமா கங்காதரன் (கோண்டாவில்), தர்சினி செல்வரத்னசிங்கம் (பொலிகண்டி), வெண்ணிலா பெர்னாண்டோ (பொலிகண்டி), வசந்தநாயகி முருகேசு (மிருசுவில்), ஜெயந்தினி தங்கராஜா (மீசாலை), சந்திரலேகா இராமச்சந்திரன் (அச்சுவேலி), கல்யாணி பாக்கியநாதன் (பருத்தித்துறை),

சுவர்ணா தர்மலிங்கம் (யாழ்ப்பாணம்), தங்கராஜா நிமலன் (பருத்தித்துறை), பரமசாமி சந்திரமோகன் (மிருசுவில்), நடராஜா கலைமகள் (காரைநகர்), அனிற் விஜிதா அந்தோனிப்பிள்ளை அல்பிரட் (இளவாலை), கணேசமூர்த்தி தர்சினி (கொற்றாவத்தை), தர்மகுலசிங்கம் சுஜீவா (அல்வாய்), சுந்தரலிங்கம் விஜிதா (கொடிகாமம்), கதிர்காமத்தம்பி சிவகுமார் (புலோலி), தங்கராஜா ஜெயரதி (ஏழாலை மேற்கு), சிவலிங்கம் கலைச்செல்வி (புலோலி), தயாளினி தர்மகுலசிங்கம் (சாவகச்சேரி), சிவபாமா தங்கராஜா (மிருசுவில்),

## நூலக விஞ்ஞானம்

உஷாநந்தினி தர்மசேகரம் (மானிப்பாய்), மீரா லோகநாதன் (மானிப்பாய்), ஆன்மேரி டயானா ஹென்றி (பண்டத்தரிப்பு), லோறன்ஸ் விமலஹாந்தன் (வேலணை), துளசி பாலசிங்கம் (உடுப்பிட்டி), வானதி புலேந்திரன் (கொக்குவில் கிழக்கு), பகீரதி நல்லநாதன் (உடுவில்), காயத்திரி செல்வநாயகம் (சுன்னாகம்), துஷ்யந்தி கணபதிப்பிள்ளை (முல்லைத்தீவு), சண்முகரத்தினம் நிமலநேசன் (தாவடி),

## நடனம்

கிரிலோஜினி செல்வராஜா (கரவெட்டி), சங்கரப்பிள்ளை தர்சினி (சாவகச்சேரி)

---

**இதேவேளை, யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரியில் கற்கை நெறியைப் பூர்த்திசெய்து தேசிய பாடசாலைகளில் ஆசிரிய நியமனம் பெற்றுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு:-**

## ஆரம்பக் கல்வி

மதனராஜா மகேஸ்வரன் (இணுவில்), வாசுகி பரமநாதன் (சுண்டுகுளி), ஞானரூபி விசுவலிங்கம் (வண்ணார் பண்ணை), துஷியா பாலகிருஷ்ணன் (யாழ்ப்பாணம்), தர்சிகா தம்பிராசா (மந்துவில் கிழக்கு), சிவகாமி கணேசரட்ணம் (கொழும்பு), சிவராதிகா இளையதம்பி (சரசாலை வடக்கு), றோசரி தர்மினி சிங்கராசா (மல்வம் உடுவில்), கிருஷ்ணபிள்ளை ஜெயரமணன் (மல்லாகம்),

## கணிதம்

சஞ்சுலா செல்வரஞ்சிதன் (வட்டுக்கோட்டை கிழக்கு), டேவிட்ராஜா பகீரதன் (வேப்பங்குளம்), ஜெயதரா சசிகரன் (வவுனியா), மகாலிங்கம் வாசவன் (அக்கரைப்பற்று), சுந்தரலிங்கம் விஜயதர்சன் (கல்முனை), கருணாநிதி நிமலன் (கரணவாய் வடமேற்கு), சோமசுந்தரம் பரணீதரன் (கல்முனை), எஸ்.சங்கரன் (அல்வாய் வடக்கு),

## சங்கீதம்

புஸ்பலதா யோகராஜா (சண்டிலிப்பாய்), தனுஷியா கொன்ஸ்ரன் (நல்லூர்), கோமதி சிவலிங்கம் (சுன்னாகம்), கதிர்காமத்தம்பி சித்திரா (மன்னார்),

## விஞ்ஞானம்

பிரகலாதன் செந்தில்குமரன் (கொழும்புத்துறை), சுதர்சனா சுப்பிரமணியம் (சாவகச்சேரி), அருட்செல்வி அருட்ஜோதி வர்ணன் (சங்கத்தானை), கௌரி தனபாலசிங்கம் (தெல்லிப்பளை), சரவணமுத்து அகிலன் (கல்வயல்), கவிதினி கணேசலிங்கம் (வவுனியா), செல்வரத்தினம் விஜயகுமார் (தம்பிலுவில்), சுப்பிரமணியம் சதீஸ்குமார் (நாவற்குடா), விஜய ரகுநாதன் லாவன்யா (யாழ்ப்பாணம்),

## ஆங்கிலம்

இரத்தினகோபாலு பத்மினி (கரவெட்டி), சீவரத்தினம் தர்சினி (திருநெல்வேலி), நரசிங்கவேல் கார்த்திகா (உடுப்பிட்டி)

## நூலக விஞ்ஞானம்

அம்பிகா சிதம்பரப்பிள்ளை (உடுவில் மேற்கு), ஹம்சலா காளிக்குட்டி (பெரிய கல்லாறு), ரேணுகா சச்சிதானந்தம் (கரவெட்டி மேற்கு)

## நடனம்

தபோதினி இராஜதுரை (மானிப்பாய்), வேணுகாதேவி சோமசுந்தரம் (வவுனியா), யசோதினி ஜல் (கல்லடி), ஹேமலதா செல்வராசா (மட்டக்களப்பு),

## சித்திரம்

நேஸ் முகமட் யஷீர் மியாத் (கிண்ணியா), அழகர்சாமி ஜெயதீபன் (மட்டக்களப்பு), கிருஷ்ணபிள்ளை சுரேஸ் (அல்வாய்).

---

**இதேவேளை, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்றலைப் பூர்த்தி செய்து, தேசிய பாடசாலைகளில் ஆசிரிய நியமன நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர் விபரம் வருமாறு -**

## ஆரம்பக் கல்வி

ரி.ஜெயமாலினி (திருகோணமலை), கே.வாசுகி (கிண்ணியா), என்.தர்சினி (வத்தேகம), பி.அனுஜா (வாழைச்சேனை), என்.பரமேஸ்வரி (மன்னார்), ஈ.விஜயவதனி (வவுனியா), ஆர்.தவரஞ்சிதம் (வவுனியா), கே.சுகந்தினி (வவுனியா), ரி.பவானி (கொழும்பு - 03), பி.பாலேஸ்வரி (வவுனியா), எஸ்.தர்மிளா (வவுனியா), டோனாநந்தஜோதி பெர்னாண்டோ (மன்னார்),

ஜி.அலையரசி (வவுனியா), எஸ்.சுபாஜினி (வவுனியா), ஏ.செல்வதேவி (வவுனியா), ஆர்.விஜிதா (வவுனியா), எஸ்.கௌசல்யா (வவுனியா), ஆர்.ரேணுகா (வவுனியா), கே.செல்வகுமார் (வவுனியா), ஏ.அல்மோலி (கிளிநொச்சி), ஆர்.அமரதர்மினி (பூநகரி), ஆர்.ஜெயப்பிரியா (வவுனியா), என்.கமலலோஜினி (சுன்னாகம்), கே.சுந்தரமோகன் (வல்வெட்டித்துறை),

எஸ்.தேவகி (பருத்தித்துறை), வி.ரேணுகா (உடுப்பிட்டி), கே.திலகராணி (திருகோணமலை), பி.விமலரதி (திருகோணமலை), ரி.பிரசாந்தினி (திருகோணமலை), எஸ்.உதயானன் (கோண்டாவில்), வி.புவிவதனி (மீசாலை), ரி.மாலதி (சுழிபுரம்).

*(மிகுதி நாளை தொடரும்)*

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கசப்பான சம்பவங்கள் இருப்பினும் பேசுவதைத் தவிர வேறு வழியில்லை!

## ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளில் சில கசப்பான சம்பவங்கள் இடம் பெற்றுள்ள போதும், பேச்சுக்கள் மூலமாக ஏற்படும் தீர்வைத் தவிர வேறு மாற்று நடைமுறைகள் எதுவும் கிடையாது என ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்தார்.

தனது விஜயம் தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் இணைந்து கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு நோர்வே அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளமை சமாதான செயற்பாட்டிற்கு சிறந்த அறிகுறியாகும்.

இலங்கையில் அரசியல் ரீதியான படுகொலைகள் இடம்பெறுமிடத்து, அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அதற்கான பொறுப்புகளை ஏற்று பதில் சொல்ல வேண்டும்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தமக்கிடையேயுள்ள பிணக்குகளைப் பேசித் தீர்க்கவேண்டும். கருணாவின் பிணக்குகளுக்கு பின்னர் அதனுடன் சம்பந்தப்பட்ட 66 கொலைகள் இதுவரை இடம்பெற்றுள்ளன.

கௌசல்யனின் கொலை போன்ற சம்பவங்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாது தடுப்பதற்கு இரு தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று யசூசி அகாஷி மேலும் தெரிவித்தார்.

# மாணவர் ஒன்றியத்தின் கடிதமும் 'நமது ஈழநாடு' விளக்கமும்!

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீட புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு தொடர்பாக "நமது ஈழநாடு" பத்திரிகையில் நேற்று வெளியான செய்தியில் - "புகுமுகமாணவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் சிரேஷ்ட மாணவர்களால் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக" குறிப்பிடப்பட்டிருந்தது குறித்து கலைப்பீட மாணவர் ஒன்றியம் கடிதம் ஒன்றை எமக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தக் கடிதத்தில் புகுமுக மாணவர்களுக்கு பிரச்சினைகளைக் கொடுக்கும் அளவுக்கு மோசமாக செயற்படத் தாங்கள் ஆயத்தமாக இல்லை என்றும், மேற்படி வசனம் சிரேஷ்ட மாணவர்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பாக கலைப்பீடாதிபதியுடன் தாம் தொடர்புகொண்டு கேட்டபோது, தான் அப்படிக்கூறவில்லை எனத் தெரிவித்ததாகவும், எனவே அந்தச் செய்திக்கு மறுப்பு வெளியிடும்படியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆசிரியர் குறிப்பு

மேற்படி செய்தியை கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தனது கையொப்பத்துடன் நமது ஈழநாடு பத்திரிகைக்கு பக்ஸ் மூலம் அனுப்பியிருந்தார்.

அதில் "புகுமுக மாணவர்களுக்கு சிரேஷ்ட மாணவர்களால் எந்தப் பிரச்சினையும் ஏற்படாவண்ணம் பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி எந்த மாற்றமும் இன்றியே பிரசுரிக்கப்பபட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# மாமனிதர் அ.சந்திரநேருவுக்கு மனித உரிமை செயலகம் அனுதாபம்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவுனர்களில் ஒருவரான மாமனிதர் அரியநாயகம் சந்திரநேருவின் இழப்பு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கும், அதனுடன் தொடர்புடைய உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கும் பேரிழப்பாகும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலக ஆளுநர் சபை – சந்திரநேருவின் படுகொலை தொடர்பாக நேற்று கூடி ஆராய்ந்த பின்னர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு - கிழக்கில் நிலவும் அதியுயர் இராணுவ மயப்படுத்தப்பட்ட, வரவேற்கத்தகாத சூழல் ஒன்றுக்குள் நின்று இவர் உழைத்தவர். அத்துடன் தமிழர் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட நிராதரவான மக்களது உரிமைகளை பாதுகாப்பதற்கும் முன்னின்று உழைத்தவர்.

ஐ.நா சாசனத்திலும், சர்வதேச உடன்படிக்கைகளிலும் சொல்லப்பட்ட மனித உரிமைகளும், சுதந்திரமும் மறுக்கப்பட்ட அப்பாவி மக்களின் தேவைகளை தனி மனிதனாக நின்று பூர்த்தி செய்வதற்கு அவருக்கு உறுதுணையாக நின்றது அவரது ஆளுமையும், மனிதாபிமானமுமே.

அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி நீண்டகாலமாக நீதி பெறும் வாய்ப்பின்றி சிறைகளில் வாடியவர்களை விடுவிப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசியற்துறை...

சென்று மக்கள் மத்தியில் அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுதான் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை.

அந்த வகையில்தான் கௌசல்யன் தனது பணியைத் தொடர்ச்சியாக ஆற்றிக்கொண்டிருந்தார். இப்போது மட்டுமல்ல பல தடவைகள் போக்குவரத்துக்களை செய்திருக்கிறார். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நடமாடி அந்த மக்களுடைய தேவைகளை, அவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்ற சமூக வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற பல பணிகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டவர்.

சுனாமி அனர்த்தத்தின்போதும், பாதிக்கப்பட்ட பேரழிவைச் சந்தித்த மக்கள் மத்தியில் போய் நின்று பணியாற்றினார். அந்தப் பணிக்காகவே அவரது நடமாட்டமும், அவரது பயணமும் அமைந்தது.

இந்தக் கட்டத்தில்தான் அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பெரும் படுகொலையைச் செய்திருக்கிறார்கள் என்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மேலும் குறிப்பிட்டார்.

## கூட்டணி அரசாங்கத்திலிருந்து...

அத்தனகலவில் நேற்று பலநோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கியைத் திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா தனது உரையில் மேலும் -

வடக்கு - கிழக்கில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சிக்கு அரசுடன் இணைந்த சில கட்சிகள் குந்தகம் விளைவிக்கின்றன.

சின்னச்சின்ன விடயங்களுக்குக் கூட அவர்கள் அரசிலிருந்து விலகப்போவதாக அச்சுறுத்துகின்றனர். வடக்கு - கிழக்கு பிரச்சினைகளைத் தீர்க்க முனையும்போது எம்முடன் இணைந்துள்ள சிலர் ஒரு சொல் பிழைத்தாலும் பிரிந்துசெல்வோம் என்கின்றனர். இவ்வாறானவர்கள் போகவிரும்பினால் போகட்டும். அவர்களை வைத்துக்கொண்டு ஆட்சி செய்யமுடியாது.

தீர்வு என்று வரும்போது இது தவறு, இதில் எழுத்துப்பிழை. இவ்வாறு போடவேண்டும், இதில் இவ்வாறு வரவேண்டும் என்று தொட்டதற்கெல்லாம் பிழை கண்டுபிடிக்க முடியாது. இது கேலிக்கூத்து.

புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை விட எமது ஆட்களே என்னை முதலில் கொல்ல எத்தனிக்கின்றனர். ஆனாலும் நான் தற்போது கடுமையாகவே நடந்துகொள்கின்றேன். வீட்டுக்குச் செல்லமுன்னர் வடக்கு- கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வை ஏற்படுத்தவேண்டுமென எண்ணியிருக்கின்றேன். இதற்கு மக்கள் ஆதரவு கிடைத்தால் செய்வேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக ஜே.வி.பிக்கும் - அரசாங்கத்துக்கும் இடையிலான முறுகல் நிலை தீவிரமடைந்துவரும் சூழலில் ஜனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியினரை பகிரங்கமாக எச்சரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த எச்சரிக்கையையடுத்து அரசியல் நிலையில் முக்கிய மாற்றங்கள் நிகழ வாய்ப்பிருப்பதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

## துறைசார்...

பணிப்பாளர் தூயவன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருள்மாஸ்ரர், மட்டு - அம்பாறை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தயாமோகன், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மட்டு-அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி, மட்டு - அம்பாறை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தங்கையா, அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா, விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளர் நரேஸ், ஊடகப் பிரிவைச் சேர்ந்த மிரேஸ், தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சக்தி, லெப். கேணல் ராஜன் கல்விப் பொறுப்பாளர் கீதன், விடுதலைப் புலிகளின் அரசசார்பற்ற நிறுவன இணைப்பாளர் பாவரசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## குளத்தில்...

நேற்றுமுன்தினம் மாலை மாடுகளை மேய்க்கச் சென்ற குறித்த மாணவன், இரவுவரை வீடு திரும்பாததால் குடுமபத்தினர் தேடிச் சென்றதாகவும், நேற்றுக் காலை 10.30 மணியளவிலேயே மேற்படி மாணவனது சடலம் கொட்டுக்கேணிக்குளத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

சடலம் பருத்தித்துறைப் பொலிஸாரால் மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணையை பதில் நீதிவான் ச.பா.ரவீந்திரன் மேற்கொண்டார். பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை பிரேத பரிசோதனையை மேற்கொண்டு, நீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் என அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(14)

## அமைச்சரின்...

போக்குவரத்து, சக்தி, கூட்டுறவு அமைச்சு அலுவலகத்திலிருந்து அதன் பின்புறமுள்ள 10 அடி உயரமுள்ள மதிலுக்கு மேலால் உணவுப்பொருட்கள் எடுத்துச்செல்லப்படுவதைக் காட்டுகிறது.

இந்தப் பொருட்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தென் மாகாண அமைச்சர் யு.டி.ஜி. ஆரியரட்ணவின் உத்தியோகபூர்வ வாகனத்தில் ஏற்றப்படுவதும் இந்தப் படத்தில் பதிவாகியுள்ளது.

கொழும்பு விலையில் கணனிகள் !!!
தரம் தராதரம் அதன் மூலம் நிரந்தரம் என்பது எமது தாரக மந்திரம்
CeSCO
விபரம் 02 பக்கம் பார்க்க

## விமான எதிர்ப்பு...

பட்டன. இதன்மூலம் வெப்ப ஈர்ப்பு ஏவுகணைகளிலிருந்து தற்காப்புத் தேடப்படுவது வழக்கமாகும்.

அத்துடன் ஹெலியில் இருந்த இலத்திரனியல் ஏவுகணை எதிர்ப்பு கருவியும் எச்சரிக்கை செய்ததாகவும், இதனால் புலிகள் இதற்கு முன்னர் பயன்படுத்திய ரஷ்யத் தயாரிப்பு சாம் - 7 ஏவுகணைகளை விட வேறேதும் இனங்காணப்படாத ஏவுகணையை வைத்திருக்கலாம் எனவும் சந்தேகம் எழுந்துள்ளது.

பின்னர் கிளிநொச்சியிலிருந்து ஹெலி புறப்பட்டு திருகோணமலை நோக்கி பயணமானபோதும் அதே பகுதியில் இவ்வாறு முன்னெச்சரிக்கை கருவிகள் திடீரென தொழிற்பட்டன.

முன்னர் வலப்புறமாக வெப்பக் கோளங்களை வெளியிட்ட ஹெலி பின்னர் இடப்புறமாக வெளியிட்டது. இதனால் வான் பரப்பில் வாணவேடிக்கை போல இருந்தது.

இது தொடர்பாக ஹெலிகொப்ரர் விமானி முறைப்பாடு செய்ததையடுத்து உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியிருப்பதுடன், புதிய தகவல்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விமானப்படைத் தளபதி தெரியப்படுத்தியிருப்பதாகவும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## கண்காணிப்பு...

கொண்ட இந்தச் சந்திப்பில் -

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து, 23 ஆவது டிவிசனின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் வஜிர குணவர்த்தன கடுமையான விமர்சனத்தை முன்வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதம் தரித்த விடுதலைப் புலிகளின் மூன்று குழுக்கள், அண்மையில் 23 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்துக்குள் பிரவேசிக்க எடுத்த நடவடிக்கை பற்றி அவர் அதிருப்தி வெளியிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்புக் குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கையில் -

விடுதலைப் புலிகளுக்கு எமது நிலைப்பாட்டைத் தெரிவித்து, ஆலோசனை வழங்க வேண்டுமென கண்காணிப்புக்குழுவிடம் கேட்டிருக்கிறோம்.

இத்தகைய சம்பவங்கள், எதிர்வரும் காலத்தில் இடம்பெறுமானால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மரபணு சோதனை...

மரபணுப் பரிசோதனை நடத்தப்பட்ட வைத்தியசாலையின் தலைவர் வைத்திய கலாநிதி மாயா குணசேகர இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

குழந்தை மற்றும் பெற்றோரெனக் கூறியோரின் மரபணுச்சோதனை 48 மணிநேரத்திற்குள் பூர்த்தியாகிவிட்டது.

மேற்படி மரபணு சோதனை அறிக்கை கல்முனை மாவட்ட நீதிமன்றத்துக்கு கடந்த வெள்ளியன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பரிசோதனை செய்வதற்கு 10 தொடக்கம் 15 நாட்கள் வரை எடுக்கும். ஆனால், நாம் முன்னுரிமை கொடுத்து மேற்படி பரிசோதனையை விரைவாக மேற்கொண்டிருக்கிறோம். பேபி-81 குழந்தை உண்மையான பெற்றோரிடம் விரைவில் சேரும் எனத் தெரிவித்தார்.

இந்த மருத்துவ அறிக்கையை கல்முனை மாவட்ட நீதிமன்றம் இவ்வாரம் வெளியிடலாம் எனவும், பேபி-81 குழந்தை தொடர்பான இறுதித் தீர்ப்பு ஏப்ரல் 20 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மரபணு சோதனைகளை மேற்கொள்வதற்கான தனியான ஆய்வுகூடம் ஒன்றை அமைப்பதற்கு பகுப்பாய்வுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நிதியை திறைசேரியிடம் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், மேலதிக தொழில்நுட்ப அறிவைப்பெற இந்தியாவிலிருந்து அதிகாரி ஒருவர் அழைக்கப்படவுள்ளார்.

இவ்வாறான மரபணு சோதனை அரசாங்கத்திடம் இல்லாமையால் பேபி-81 இன் மரபணு சோதனை தனியார் நிறுவனம் ஒன்றில் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## நீங்கா நினைவில் நண்பனே

### சின்னப்பு ரமேஸ்

மண் மகிழ 13 – 12 – 1975



மனம் நெகிழ 14 – 11 – 2004

நெஞ்சம் கனக்கிறது – நின்
முகம் தேடும்
உறவுகளைக் காண
உற்ற நண்பனே
ஒற்றை சொல்லேனும் சொல்லாது
நண்பர்கள் நாமிருக்க
தனித்து நீ சென்றதேனோ!

நண்பர்கள்
மோகன், சசி, வசந்தன், இராஜேஸ்,
வசந்த், குணாளன், சாந்தன், பாலன்,
சிவகுமார், அலங்கேஸ்

(1065)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.02.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.